
விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 004 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 07 சனிக்கிழமை (23.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


சனி
பெயர்ச்சி
பலன்கள்
இன்று முதல்
உங்கள்
வலம்புரியில்
வாசிக்கத் தவறாதீர்கள்

## மக்கள் வாக்குரிமைக்காக எழுந்து நிற்கும்வரை தேர்தல் நடத்தப்படாது

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



(கண்டி)

மக்கள் தமது வாக்குரிமைக்காக எழுந்து நிற்கும்வரை தேர்தல் நடத்தப்படமாட்டாது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒத்திவைக்கப்பட்ட தேர்தலை நடத்துவதற்கு உரிய 15

## மன்னார் மாவட்ட அரச அதிபராக

### கனகேஸ்வரன் நியமனம்


(மன்னார்)



வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரன் மன்னார் மாவட்டத்தின் புதிய அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். 15

## ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கத் தயார்

### சி.வி.விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

தமிழ்க் கட்சிகள் ஒருமித்து அழைத்தால் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் பரிசீலிக் 15

## இலங்கையில் மீண்டும்
# கொரோனாவின் புதிய மாறுபாடு

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

ஜே.என்-1 ஒமிக்ரோன் வகை புதிய கொரோனா வைரஸ் திரிபானது இலங்கையிலும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் ஒவ்வாமை நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் ஆய்வுகூடத் தலைவரான சந்திம ஜீவந்திர தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக

### யாழில் இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

28 ஆண்டு காலமாக சிறை வைக்கப்பட்டுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகளினதும் மனிதாபிமான விடுதலையை வலியுறுத்தி பொதுவெளியூடாக ஜனாதிபதியிடம் அனைவரும் இணைந்து பொது வேண்டுகோளினை விடுவிப்பது தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த விசேட 15

### பணவீக்கம் உயர்வடைவு

## உணவுப் பொருட்களின் விலை கட்டுக்கடங்காமல் உச்சம் தொடும்

(கொழும்பு)

நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளதால் உணவுப் பொருட்களின் விலை கட்டுக் கடங்காமல் உச்சநிலையைத் தொடும் அபாய நிலை உருவாகியுள்ளது.

தேசிய நுகர்வோர் விலை சுட்டெணின் பிரகாரம் பணவீக்க விகிதம் 2023 நவம்பரில் 2.8% ஆக பதிவாகியுள்ளதாக தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் (DCS) தெரிவித்துள்ளது.

2023 ஒக்ரோபரில் 1.0 வீதமாக பணவீக்கம் பதிவாகியிருந்த நிலையில் ஒக்ரோபருடன் ஒப் 15

## மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 80.16 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன், WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 74.70 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

கடந்த மாதம் 15

DLB
DEVELOPMENT LOTTERIES
சனிதா-Shanida
இன்றைய ஜாக்பொட் பரிசு
ரூ. 67,662,980/-
(C-2197)

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் நியமனம்



(யாழ்ப்பாணம்) தெல்லிப்பழை வீமன் காமம் மகா வித்தியாலய அதிபர் சோமசுந்தரம் இராமநாதன் வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி அதிபர் கந்தசாமி கண்ணன் வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார். (ம)



## தென்னிலங்கையில் சித்திரவதை கூடம்

தென்னிலங்கையில் வீடொன்றில் செயற்பட்டு வந்த சித்திரவதை கூடம் ஒன்றை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

களுத்துறையில் போதைப்பொருள் தொடர்பான பணத் தகராறு காரணமாக நபர் ஒருவரை கூரிய ஆயுதங்களால் தாக்கிய கும்பலைச் சேர்ந்த 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது வீட்டில் கை கால்கள் கட்டப்பட்டு, கொடூரமாக தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த இளைஞனை பொலிஸார் காப்பாற்றியுள்ளனர். அந்த வீடு சித்திரதைக்கூடம் போன்று செயறபட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ம-7)


## காணி, வீடு விற்பனைக்கு

கரவெட்டி, கரணவாய் பிரதேசத்தில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு. பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இருந்து 75 m தூரத்தில். (18316)

**076 939 1976**

## இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்...

கனடா, பிரான்ஸ், போலாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்கு முற்பணம் எதுவுமில்லாமல் விரைவாக வீசாக்களை பெற்றுக் கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**Note - வங்கி கூவப்புகள் மட்டும் காட்டினால் போதும்.**

**Hybrid International hub (pvt) ltd.**

(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

யாழ்ப்பாணம்

077 815 5920, 076 250 0098, 021 222 1265 (C-7980)


## துயர் பகிர்கின்றோம்



அமரர் திரு. **தியாகராசா வல்லிபுரம்**

யாழ். குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் 01.06.2001 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டுவரை பண்ணை முகாமையாளராகக் கடமையாற்றிய அன்னாரின் மறைவையொட்டி அதிர்ச்சியடைந்தோம்.


தாங்கள் மறைந்தாலும் தங்களின் சேவையைப் பாராட்டி எமது சங்கத்தில் என்றைக்கும் உங்கள் நிழல் அழியாதிருக்கும். துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (C-7978)

தோற்றம் : 25.02.1939

மறைவு 26.11.2023

**தலைவர்/நிர்வாக சபையினர் பணியளார்கள், அங்கத்தவர்கள் யாழ் குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் வ-து**

## 51 வது பிறந்ததின வாழ்த்து




இன்று 23.12.2023 தனது 51 வது பிறந்த தினத்தை கொண்டாடும் யாழ் பிராந்திய முகாமையாளர்

**திரு.தேவராஜா வைகுந்தன்**

அவர்களை பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

*வாழ்த்துவோர்:*

**C.C.B பளை பிரதேச தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், பளை கமநல சேவை தென்னை சார் அபிவிருத்தி உத்தியோகத்தர், தென்னைச் செய்கையாளர்கள்** (C-7979)

## மரண அறிவித்தல்



### மகாலிங்கம் குலராஜவதி

### (சின்னப்பாப்பா)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் குலராஜவதி அவர்கள் 20.12.2023 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கதிர்காமத்தம்பி மகாலிங்கத்தின் அன்பு மனைவியும் Dr.பாஸ்கரன்(சிலாபம்) அமரர் சிறீகரன்(அவுஸ்திரேலியா), சபீதா (அவுஸ்திரேலியா), நிதாஸ்கரன், கதிர்கரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை 24.12.2023 அவரது மகனின் இல்லத்தில்(சிலாபம்) காலை 11.30 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் சிலாபம் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


*தகவல்:*

ம.பாஸ்கரன் (மகன்)

077 770 7947

(C-7981)

## நன்றி நவிலல்



அமரர்

**அமிர்தநாதர் சந்தியாப்பிள்ளை**

(இளைப்பாறிய நில அளவை அத்தியட்சகர், பதிவு பெற்ற நில அளவையாளர்)

அவர்களின் இழப்பு செய்தி கேட்டு நேரில் வந்து எம்முடன் தோளோடு தோள் கொடுத்த அயலவர்கள், உறவினர்கள் அன்பர்கள் மற்றும் நலன் விரும்பிகளுக்கும் மற்றும் இங்கு நேரில் வர முடியாத விடத்து தொலைபேசி வாயிலாகவும் குறுந் தகவல் வழியாகவும் சமூக வலை தளங்களில் பகிர்வுகள் மூலமும் எமது குடும்ப விருட்சத்தின் துயரில் பங்கெடுத்த அனைவருக்கும் எமது குடும்ப தலைவரின் துயரிற்காக பதாதைகள், துண்டுபிரசுரங்கள், மலர்வளையங்கள் மற்றும் பத்திரிகைகள் வாயிலாகவும் துயரினை பகிர்ந்தோருக்கும் இறுதி வழிபாடுகள், யாத்திரையில் சிறப்பாக ஒழுங்குபடுத்தியவர்கள், பங்குபற்றியவர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக மனம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். (18326)

'அமுதகம்'

பிரதான வீதி, மாதகல். 077 742 1575

இங்ஙனம் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்கள் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது

(கொழும்பு)

**பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுக்கும் சகல தீர்மானங்களும் நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளதுடன் வரிக் கொள்கை அடுத்த ஆண்டு அரசியல் ரீதியிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**




கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் கட்டளைகளுக்கு அமையவே பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள். வரி தொடர்பில் அவர் எடுக்கும் தீர்மானங்கள் அனைத்துக்கும் கண்களை மூடிக் கொண்டு ஆதரவு வழங்கி விட்டு வரி அதிகரிப்புக்கு நாங்கள் எதிர்ப்பு என்று மக்கள் மத்தியில் குறிப்பிடுகிறார்கள்.

முறையற்ற வகையில் வற்வரி உட்பட சகல வரிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதால் 2023 ஆம் ஆண்டை காட்டிலும் அடுத்த ஆண்டில் பிரச்சினைகள் தீவிரமடையும். மேலும் வரி கொள்கை நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை கேள்விக்குள்ளாக்கும்.

அதேவேளை மக்கள் போராட்டங்கள் மீண்டும் தலைதூக்கும் எனவும் குறிப்பிட்டார். (5-6)

## பெரமுனவின் செயற்குழு உறுப்பினராக தமிழ்ப் பிரதிநிதி



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்புச் செயலாளரான கீதநாத் காசிலிங்கம் பொதுஜன பெரமுனவின் செயற்குழு மற்றும் அரசியல் பேரவை ஆகியவற்றுக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களின் மறுசீரமைப்பின் போது அவர் இந்த குழுக்களின் உறுப்பினராக நியமிக்கப்ப ட்டுள்ளார்.

காசிலிங்கம் பொதுஜன பெரமுனவின் இரண்டு குழுக்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ள தமிழ்ப் பிரதிநிதி என்ற நிலையில், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் சமூகம் மத்தியில் கட்சியின் கொள்கைகளை வலுப்படுத்துவது தொடர்பில் செயற்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

## ஜனாதிபதியினால் அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்று 10 அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்களும் இரண்டு பிர தம செயலாளர்களும் நியமிக் கப்பட்டுள்ளனர்.

இதன்படி, கல்வி அமைச்சின் செயலாளராக வசந்த பெரேராவும் நீதி சிறைச்சாலைகள் மற்றும் அரச யலைமப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளராக முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்கவும் வன ஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக குணதாச சமரசிங்கவும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளராக ஏ.சி. மொஹமட் நஃபீவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக டபிள்யூ.பி.பி. யசரத்னவும் நீர்ப் பாசன அமைச்சின் செயலா ளராக சமன் தர்ஷன பண்டிகோரளவும் கல்வி அமைச்சின் செயலாளராக பி.கே.பி.சந்திர கீர்த்தியும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளராக சுலக்ஷனா ஜயவர்தனவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளராக ரஞ்சித் ரூபசிங்கவும் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக தர்மஸ்ரீ குமாரதுங்கவும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் பல புதிய தலைமைச் செயலாளர்களையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

அத்துடன் வடமத்திய மாகாணத்தின் பிரதம செயலாளராக ஆர்.எம்.டபிள்யூ. எஸ். சமரதிவாகரவும் மேல் மாகாண பிரதம செயலாளராக எஸ்.எல்.டி.கே. விஜேசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (5-6)

## ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்க சுற்றுநிருபம் வெளியீடு

(கொழும்பு)

வணிக கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குவதற்கான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

திறைசேரியின் செயலாளர் மகிந்த சிறிவர்தனவின் கையெழுத்துடன் குறித்த சுற்றுநிருபம் வெளியாகியுள்ளது.

எவ்வாறாயினும் கடந்த வருடத்தில் வரி அறவீட்டினால் கிடைக்கப்பெற்ற இலாபத்தில் 30 சதவீதத்தை கூட்டு நிதியத்திற்கு செலுத்திய நிறுவன ஊழியர்களுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இலாபம் ஈட்டாத நிறுவனங்களின் ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு திறைசேரியின் நிதியில் இருந்து வழங்கப்படமாட்டாது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கபடநாடகம் ஆடும் அரச தரப்பினர்

(கொழும்பு)



நாட்டின் வாழ்வாதாரம் சீர்குலைந்து, பொருளாதாரம் வங்குரோத்தாகியுள்ள இந்நேரத்தில், சில தரப்பு ஏமாற்று அரசியல் நாடகங் களை தயாரித்து வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வற்வரியை அதிகரிப்பதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது நாட்டை [illegible] குடும்ப ஆட்சியின் ஒரு தரப்பினர் அதற்கு வாக்களிக்காமல், மக்கள் பக்கம் முன்நிற்பதாக பாசாங்கு செய்வதாக தங்கள் சொந்த குடும்ப உறுப்பினர்கள் வற்வரியை அதிகரிக்க ஆதரவாக வாக்களித்தனர்.

நாட்டையே வங்குரோத்தாக்கி, நாட்டை நாசமாக்கிய இவர்கள், ஏமாற்றுத் தனமான செயற்பாடுகள் மூலம் மக்கள் அவதானங்களை திசை திருப்ப மீண்டும் முயற்சித்து வருகின்றனர் என்றும் இவர்களின் இந்த போலியான செயற்பாடுகளை கண்டு ஏமாற வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# தொடரை வென்றது வெஸ்ட் இண்டீஸ்




இங்கிலாந்துக்கு எதிரான இருபது-20 தொடரை கைப்பற்றியது வெஸ்ட் இண்டீஸ். இங்கிலாந்து அணி வெஸ்ட் இண் டீஸ் சுற்றுப் பயணம் செய்துள்ள நிலையில் இரு அணிகளுக்கும் இடையில் 5 போட்டிகள் கொண்ட இருபது-20 கிரிக்கெட் தொடர் நடைபெற்றது.

முதல் இரண்டு போட்டிகளிலும் வெஸ்ட் இண் டீஸ் வெற்றி பெற்றது. அடுத்த இரண்டு போட்டிகளில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரை 2-2 என சமன் பெறச்செய்தது.

பின்னர் தொடர் யாருக்கு என்பது நிர்ணயிக்கும் 5 ஆவது மற்றும் கடைசிப் போட்டி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

முதலில் விளையாடிய இங்கிலாந்து 19.3 ஓவரில் 132 ரன்கள் எடுத்து ஓல்அவுட் ஆனது. சால்ட் அதிகபட்சமாக 38 ரன்கள் சேர்த்தார். லிவிங்ஸ்டன் 28 ரன்களும் மொயீன் அலி 23 ரன்களும் எடுத்தனர்.

வெஸ்ட்இண்டீஸ்அணி சார்பில் ரஸல், அகீல் ஹொசைன், ஹோல்டர் ஆகியோர் தலா 2 விக்கெட்டும் மொதியி 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் 133 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வெஸ்ட் இண்டீஸ் களம் இறங்கியது. தொடக்க வீரர்கள் பிராண்டன் கிங் (3), சார்லஸ் (27), பூரன் (10) சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர். ஷாய் ஹோப் ஆட்டமிழக்காமல் 43 ரன்களும் ரூதர்போர்டு 30 ரன்களும் எடுக்க வெஸ்ட் இண்டீஸ் 19.2 ஓவரில் 133 ரன்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2998


மிருளா




வாகை




பனிநிலா




அர்ச்சுன்




நிர்வீர்




சுதேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெய[illegible] facebook [illegible]தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையில் பொலிஸார் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கை

## 30 பேர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் போது ஆறு நாட்களில் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் கடந்த 17 ஆம் திகதி முதல் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பியந்த அமரசிங்க தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் நேற்று நடத்தப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது ஆறு பேர் போதைப் பொருள் குற்றப் பின்னணியில் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதி முதல் நேற்று வரையான ஆறு நாட்களில் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹெரோயின் போதைப் பொருளுடன் 16 பேரும், கசிப்புடன் நான்கு பேரும், கஞ்சா மற்றும் போதை மாத்திரைகளுடன் தலா இருவரும் உள்ளடங்கலாக 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-6-60)



பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பனைவிதைகள் நேற்று நாட்டிவைக்கப்பட்டன. (படம்-மகாலிங்கம்)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியர்

திரு. பாக்கியநாதன் சசிகுமார்

அவர்கள் 17.12.2023 அன்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் தகவல் தொழில்நுட்பத்தில் இளமாணி பட்டம் (BIT) பெற்றுக் கொண்டமையை வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று, உயர் பதவிகளில் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

(8324)

ஆசிரியர் கழகம், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி மு/கொல்ல விளாங்குளம் அ.த.க பாடசாலையில் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றிருக்கும்

திரு.சிவசுப்பிரமணியம் ஆறுமுகதாசன்

BA (Hons), MA (Culture), PGDE, MEd Reading


அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல உயர் பதவிகளைப் பெற்றிட வாழ்த்துகின்றோம்.

(C-7975)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம், யா/நாவற்குழி மகா வித்தியாலயம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்




சர்வதேச தொழில்சார் அனைத்துலக விருது வழங்கும் அமைப்பின் விருது வழங்கும் நிகழ்வு 15.12.2023 அன்று சைருண் றெஸ்ரோறன்ற், டோகா கட்டாரில் நடைபெற்ற வேளை யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும் கல்விக்கொடையாளருமாகிய

கலாநிதி. இராசையா குவேந்திரநாதன்

அவர்களின் தன்னலமற்ற சமய, சமூகப் பணிகளிற்காக

நன்மதிப்புமிக்க சாதனையாளர் விருது

கலாநிதி எச்.எம்.அப்துல் ஹாய் அவர்களால் வழங்கப்பட்டு திரு.இ.குவேந்திரநாதன் சார்பாக கலாநிதி எப்.எம்.சாரிக் அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டமையை நாமும் பாராட்டுவதோடு அவரது சமூகச் சேவை மென்மேலும் தொடர நாமும் வாழ்த்துகின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும் பெஷன் ஹவுஸ்
203, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

# இராசிபலன்

23.12.2023
மார்கழி 07, சனிக்கிழமை
ஏகாதசி முற்பகல் 8.29 மணிவரை

பரணி முன்னிரவு 10.38 மணிவரை
சுபநேரம் 3.25-4.55 மணிவரை
இராகுகாலம் 9.25-10.55 மணிவரை

சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்- உத்தரம்,அத்தம்.

வளவன்

**மேஷம்** நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவ முன்வருவர், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

**ரிஷபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம்,ஊர்மாற்றம் இடமாற்றம் என்பன இடம் பெறலாம்.

**மிதுனம்** எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள்,பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்,உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்,எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**சிம்மம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்,வருங்கால நலன்கருதி தீட்டியதிட்டங்கள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**துலாம்** குடும்பத்தினிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**விருச்சிகம்** பொது வாழ்வில் புகழ் கூடும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்,விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், போசன சுகமுண்டு.

**தனுசு** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கௌரவமான நாள்.


**கும்பம்** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாடு பெருமை சேர்க்கும் பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**மீனம்** எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

தொடக்கத்தைவிட முடிவைப்பற்றி அதிகமாக சிந்தனை செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெலிக்கொம் தனியார் மயமாவதற்கு எதிராக நிறுவன ஊழியர்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தை தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவன ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பண்ணைப் பகுதியில் உள்ள ஸ்ரீலங்கா ரெலிக்கொம் அலுவலகத்திற்கு முன்பாக நேற்று குறித்த போராட்டம் இடம்பெற்றது.

நிறுவன பங்குகளை விற்பனை செய்வது தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அமுல்படுத்துகின்ற அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை தனியார்மயமாக்குதலுக்கு எதிராகவும் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "இலாபம் ஈட்டும் தொலைத்தொடர்பு நிறுவனத்தை தனியார்மயமாக்குவதை நிறுத்து, தேசிய வளங்களை விற்பதை நிறுத்து உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு ரெலிக்கொம் நிறுவன ஊழியர்களும் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (5-6-33-316)

# யாழ்.மாநகர சபை பகுதிகளில் கொள்கலன் சேகரிப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட டெங்கு பெருகும் அபாயம் உள்ள பிரதேசம் முழுவதும் ஒன்றிணைந்த கொள்கலன் சேகரிக்கும் செயற்பாடு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இச் செயற்பாட்டில் யாழ். மாநகரசபையின் சகல கழிவகற்றும் உழவு இயந்திரங்களும் ஈடுபடவுள்ளன.

எனவே யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஜே/103, ஜே/107,ஜே/97, ஜே/102, ஜே/100, ஜே/95, ஜே/91, ஜே/87, ஜே/83, ஜே/86, ஜே/85,ஜே/63, ஜே/62, ஜே/70,ஜே/72, ஜே/78, ஜே/75, ஜே/ 77, ஜே/79, ஜே/ 81 குறித்த கிராம சேவகர் பிரிவுகளில் நடைபெறவுள்ளது என யாழ். மாநகர சபையின் ஆணையாளர் அறிவித்துள்ளார். (5-6)

# 16 கிராம் ஹெரோயினுடன் வவுனியாவில் மூவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையில் 16 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு முன்பாக உள்ள வியாபார நிலையம் ஒன்றில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையினை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (5-6)

# விளக்கமறியல்

(கரணவாய்)

நெல்லியடி மாலைசந்திப் பகுதியில் நான்கு வாள்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ஜனவரி மாதம் நான்காம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை நேற்று உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் விசேட அதிரடிப் படையினரினால் மாலைசந்திப் பகுதியில் நான்கு வாள்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பொலிஸார் நேற்று சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்திய போது அவரை நான்காம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (5-6-60)

(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் கைத்தொலைபேசிகள், போதைப்பொருள் விற்பனை செய்த பணம் மற்றும் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ஜனவரி மாதம் நான்காம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பெண்ணை நேற்று நெல்லியடிப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்திய போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (5-6-60)

(கரணவாய்)

அல்வாய் கிழக்கு பகுதியில் வயோதிப மூதாட்டி ஒருவரை கழுத்து நெரித்து கொலை செய்த மூன்று சந்தேக நபர்களை ஜனவரி மாதம் நான்காம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை உத்தர விட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு மீண்டும் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேக நபர்கள் மூவரையும் ஜனவரி மாதம் நான் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார். (5-6-60)

(கரணவாய்)

பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்படையால் கைது செய்யப்பட்டிருந்த 13 தமிழக மீனவர்களும் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டதுடன் பிறிதொரு வழக்கு விசாரணை தொடர்பில் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை உத்தர விட்டார்.

எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றத்தை மீனவர்கள் ஒப்புக்கொண்டதையடுத்து, 10 ஆண்டுகள் ஒத்தி வைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத் தண்டனை என்னும் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டனர்.

குறித்த கைது நடவடிக்கையின் போது இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு மூன்று மீனவர்கள் காயமடைந்திருந்த நிலையில் யாழ். போதனாவில் சிகிச்சை பெற்று வருவதால் குறித்த மூவரிடம் வாக்குமூலம் பெறவேண்டி இருப்பதால் விளக்க மறியலை நீடிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (5-6-60)

# தெய்வீக கலையரங்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் தெய்வீக கலையரங்கு நிகழ்வு இன்று மாலை 3 மணிக்கு காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (5-6)

# கலை விழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

தம்பசிட்டி சதாவதானி முன்பள்ளியின் கலைவிழா மற்றும் பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் சதாவதானி முன்பள்ளியின் தலைவர் பா.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (5-6)

# கலை விழா

(யாழ்ப்பாணம்)

பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 39 ஆவது கலை விழாவும் பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலையின் 13 ஆவது கலைவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கொக் குவில் பொற்பதி வீதியில் உள்ள பொற்பதி அறிவாலய கலாச்சார மண்டபத்தில் பொற்பதி அறிவாலயம் மற்றும் சரஸ்வதி முன்பள்ளியின் தலைவர் சண். வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது. (5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 550 | 600 | 420 | 500 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1200 | 1400 | 1200 |
| தக்காளி | 650 | 750 | 650 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 140 | 120 |
| கோவா | 450 | 400 | 400 | 500 |
| கரட் | 400 | 700 | 550 | 600 |
| பூசணி | 180 | 180 | 180 | 200 |
| புடோல் | 320 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 450 | 350 | 500 | 450 |
| பெரிய வெங்காயம் | 550 | 450 | 450 | 550 |
| பாகற்காய் | 800 | 800 | 650 | 800 |
| வெண்டக்காய் | 300 | 280 | 230 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 200 |
| பயற்றங்காய் | 600 | 700 | 450 | 500 |
| லீக்ஸ் | 450 | 380 | 380 | 450 |
| பீற்றூட் | 600 | 600 | 600 | 800 |
| கறிமிளகாய் | 800 | 700 | 650 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- |
| போஞ்சி | 400 | 500 | 350 | 500 |
| கத்தரிதம்புள்ள | 500 | 400 | 400 | 450 |
| கீரை - 1 பிடி | 150 | 160 | 200 | 200 |
| தேசிக்காய் | 800 | 600 | 500 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 800 | 500 | 600 |
| வெங்காயப்பூ | -- | -- | 600 | -- |
| முள்ளங்கி | 180 | 300 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 60 |
| வல்லாரை | 80 | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 180 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகராட்சிமன்றம் சாவகச்சேரியின் கீழ் காணிகளை கொள்வனவு செய்பவர்கள் மற்றும் விற்பனை செய்பவர்களுக்கான பகிரங்க அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உரிய அனுமதிகள் இன்றி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அளவுத்திட்டங்கள் மற்றும் பிற நியமனங்களை பின்பற்றாது காணிகள் பிரிவிடல் செய்யப்பட்டு துண்டங்களாக்கி சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுவதனையும் இக்காணிகள் எதுவித அடிப்படை ஆவணங்களையும் பரிசீலிக்காது கொள்வனவு செய்யப்படுவதனையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

காணிகள் பிரிவிடல் செய்யும்போது 2235/54 ஆம் இலக்க 2021.07.08 ஆம் திகதிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் "பொருத்தமான அதிகாரசபையிடமிருந்து அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் எந்தவொரு தனிநபரும் காணி உபபிரிவிடுகை அல்லது ஒருங்கிணைத்தல் மற்றும் தனி நிலஅளவை தொடர்பான எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையிலும் ஈடுபட முடியாது"

- எம்மால் வழங்கப்பட்ட அமைவுச் சான்றிதழ் இன்றி குறித்த காணியினை விற்பனைக்காக விளம்பரப்படுத்தல், அடையாளப்படுத்தி விற்பனைக்கு ஊக்குவித்தல், பத்திரிகைகளில் காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனை நடவடிக்கையில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட முடியாது.
- உரிய வகையில் உபபிரிவிடல் செய்யப்படாத காணித் துண்டங்களை கொள்வனவு செய்தவர் அக்காணிக்கானஆதனப் பெயர் மாற்றம் செய்ய முடியாது என்பதுடன் அக்காணிகளில் தங்களால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கட்டுமானங்களுக்கும் வதிவிட, வர்த்தக அனுமதி எம்மால் வழங்கப்படமாட்டாது என்பதுடன் எமது அனுமதியன்றி மேற்கொள்ளப்படும் சகல கட்டுமானங்களும் சட்டவிரோதமான செயற்பாடாகக் கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- காணித் துண்டங்களை கொள்வனவு செய்ய விரும்புவோர் நகர சபையுடன் தொடர்பு கொண்டு அக்காணி தொடர்பான சகல ஆவணங்களையும் சான்று உறுதிப்படுத்திய பின்னர் கொள்வனவு செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**
(C-7974) **2023.12.23**

தென்னாடு

## மார்கழிப் பெருவிழா 2023

திருவாசகத்தில் கற்போர்மனதைப் பெரிதும் கவர்வது, இலக்கியச்சுவையா? பத்திச்சுவையா?

**நடுவர்**
செந்தமிழ்சொல்லருவி.ச.லலீசன்
(அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)



**இலக்கியச்சுவையே!** **பத்திச்சுவையே!**



**செல்வன்.ஜெயபாலன் தவேதன்**
(மாணவன், யாழ். இந்துக்கல்லூரி)



**செல்வன் குணராசா மிதுராஜ்**
(மாணவன், யாழ். இந்துக்கல்லூரி)



**செல்வி. அபிநயா றஜீபன்**
(மாணவி, வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை)



**செல்வி.கனிமொழி கணேசானந்தன்**
(மாணவி, யா/ மகாஜனக் கல்லூரி)



**செல்வன்.மகேந்திரன் திகழ்ஒளிபவன்**
(மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி)



**செல்வி. ஆதிரை பிரதீபன்**
(மாணவி, யா/ மகாஜனக் கல்லூரி)

(C-7977)

2023.12.25 அன்று மார்கழிப் பெருவிழாவின் மாலை அரங்கில் இலங்கைவேந்தன் கல்லூரியில் இடம்பெறும்

உ
திருச்சிற்றம்பலம்

தென்னாடு

## தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும்

# மார்கழிப் பெருவிழா - 2023

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமனிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை மார்கழித் திங்கள் 9 ஆம் நாள் (டிசெம்பர் 25) திங்கட்கிழமை, இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் (கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) நடாத்த திருவருள் கூடியுள்ளது.

**மார்கழித் திங்கள் 9 ஆம் நாள் (டிசெம்பர் 25) திங்கட்கிழமை**

காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மங்களநாதர் திருக்கோயில் வழிபாட்டுடனும் மற்றும் திருமுறை, நால்வர் பல்லக்கில் திருவீதியுலாவிற்கு எழுந்தருளலுடன் அரங்கங்கள் ஆரம்பமாகும்.

**காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்**

(காலை 8.45 மணி தொடக்கம் 12.30 மணிவரை)

- 8.45 மணி - திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
- 9.00 மணி - தொடக்க உரை - சிவத்திரு. **குணரத்தினம் பார்த்தீபன்** (முதல்வர்-தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)
- 9.10 மணி- அருளுரை-தவத்திரு.**வேலன் சுவாமிகள்** (முதல்வர்-சிவகுரு ஆதீனம்)
- 9.20 மணி- திருமுறை விண்ணப்பம்-சிவத்திரு.**பத்மநாதன் சிவமைந்தன்** குழுவினர்
- 9.45 மணி- தலைமை உரை -கலாநிதி **பொன்னுத்துரை சந்திரசேகரம்** (தலைவர் - சைவசித்தாந்தத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- 10.00 மணி- வாழ்த்துரை - பேராசிரியர்.**சி.சிறிசற்குணராசா** (துணைவேந்தர்- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- 10.15 மணி- சிறப்புரை - தலைப்பு - **"பெரியபுராணமும் திருவாசகமும்"** வழங்குபவர் - **சிவ.பவானி அ.தியாகராசன் ஐயா** (அரன்பணி அறக்கட்டளை)
- 12.15 மணி-கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களைச் சிறப்புச் செய்யும் நிகழ்வு

**அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.30 முதல் 1.30 மணி வரை**

**மாலை அரங்கம் - சேக்கிழார் அரங்கம்**

**(1.30 மணி முதல் 4.30 மணிவரை)**

- 1.30 மணி -தலைமை உரை - சிவத்திரு **நல்லையா விஜயசுந்தரம்** (தலைமை ஆசிரியர் - வலம்புரிப் பத்திரிகை)
- 1.45 மணி - சிவதாண்டவம் (யா/குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்)
- 2.00 மணி- சிறப்புரை - தலைப்பு - **"நானோ இதற்கு நாயகமே"** வழங்குபவர் - சிவத்திரு.**ச.விநாயகமூர்த்தி ஐயா** (ஓய்வுநிலை போதனா ஆசிரியர்)
- 3.00 மணி-பட்டிமண்டபம்-தலைப்பு-**'திருவாசகத்தில் கற்போர் மனதை ஈர்ப்பது, பத்திச்சுவையே!- இலக்கியச்சுவையே!'**
- 4.00 மணி- பரிசளிப்பு நிகழ்வு-திருவாசகக் கட்டுரைப்போட்டிக்கான பரிசில் வழங்கல்
- 4.20 மணி- நன்றியுரை - சிவத்திரு. **செந்தமிழாதன்** (பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு. **செந்தமிழாதன்** மற்றும் சிவத்திரு. **பாலுசாமி சிவமாதவன்** (ஆசிரியர்கள் - தென்னாடு திங்கள் இதழ்)

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**
திருச்சிற்றம்பலம்

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம். 021 222 9722 / 070 770 1111.**

**விழா அனுசரணை-**

Ken Tower
LAND MAARK ENGINEERING (PVT) LTD

(C-7978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் கிறிஸ்தவ
# திரு.ச.வேலழகன் அவர்களின் சே

## ஆசியுரை



கோப்பாய் கிராமத்தில் பிரபல கல்லூரியாக இயங்கியது கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியாகும். இந்த பாடசாலையில் பல அதிபர், ஆசிரியர், கல்விமான்கள் கடமையாற்றி சென்றுள்ளனர்.

அந்த வகையில் எமது மதிப்புக்குரிய அதிபர் திரு.சண்முகநாதன் வேலழகன் அவர்கள் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை அதிபராக கடமையாற்றி இப் பாடசாலையின் வளர்ச்சி, மாணவர்களின் ஒழுக்கம், கல்வி வளர்ச்சி, பல மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிய பெருமை இவரை சாரும்.

திரு.வேலழகன் அவர்கள் நோயற்ற, வாழ்வு குறைவற்ற செல்வத்துடன் வாழ எல்லாம் வல்ல ஸ்ரீசித்திரவேலாயுத பெருமான் திருவருள் புரிவாராக. தீர்க்க ஆயுள் மான்பவ.

பூ.கீதசந்திர குருக்கள், பிரதமகுரு,
ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி கோவில்,கோப்பாய்.

## பணி நிறைவு நாள் வாழ்த்துச் செய்தி



நல்லதோர் திட்டமிடலாளரான திரு. ச.வேலழகன் இறைசிந்தனையுடைய நல்ல மனிதராவார். இவர் அதிகாலை 4.00 மணிக்கு நித்திரைவிட்டு எழுந்து தனது நாளாந்தப் பணிகளைத் தொடங்குவார். கோப்பாய்க் கல்விக் கோட்ட அதிபர் சங்கத் தலைவரான இவர் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் மேல் அளவு கடந்த பற்றுடையவர். பாடசாலை மாணவர்களைத் தனித்தனியாக அறிந்த ஒருவர்.

இவருடைய உன்னதமான சேவையின் காரணமாக இறைவன் இவருடைய பிள்ளைகளை உயர்கல்விபெற வைத்து உயர்வு பெறவைத்துள்ளார். நேரமுகாமைத்துவம், மனிதநேயப்பண்பு, கோபத்தை வென்றமை, இயற்கையோடும் இறைவனோடும் சேர்ந்து இணைந்து வாழுதல், குழுவாகச் சேர்ந்து வினையாற்றல், கடின உழைப்பு, ஆரோக்கியமான உடல்நலம், நல்லவற்றில் ஆர்வம்காட்டுதல், நல்ல நண்பர்களைத் தேடிக்கொள்ளல், இனிமை யாகப் பேசுதல், நல்ல தலைவராகச் செயற்பட, மிகுந்த சகிப்புத் தன்மை உட்பட நற்பண்புகளைப் பாடசாலையில் நிலைநிறுத்தி மாணவச் செல்வங்களையும் ஆசிரியர்களையும் அரவணைத்து நன்னிலைப் படுத்திய பெருந்தகை. ஓய்வுக்காலத்தில் எல்லா நலன்களும் பெற்று மன அமைதியோடு, நோய் நொடியின்றி குடும்பத்தாருடன் 100 ஆண்டு காலம் ஆனந்தமாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நா.சிவநேசன், கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம், கோப்பாய்.

## வாழ்த்துரை



யாழ்.நகரின் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் காலத்தால் முந்தியதுமான கல்லூரியின் சிறப்பு மிக்க அதிபர் திருவாளர் ச.வேலழகன் சேர் அவர்களின் சேவை நயப்பு விழாவுக்கான வாழ்த்துரையைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். 2014 இல் இக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றதில் இருந்து இன்றுவரை கல்லூரியை திறம்பட நடத்தி வருகின்றார். நகரப் பாடசாலைகளை நோக்கி அனுமதிக்காகச் செல்லும் மாணவர்கள் மத்தியில் இயலுமானவரை அவர்களின் கணிசமானோரை எமது பாடசாலைக்கு வரவழைப்பதில் பல்வேறு நுட்பங்களை கையாண்டு தமது முயற்சியில் சற்றும் தளராது அரும்பாடுபட்டவர்.

ஆசிரியர்களை நட்புறவுடன் வழிநடத்தி பாடசாலையில் எந்த முரண்பாடுகளுக்கும் இடம் கொடாமல் பாடசாலையை இன்று வரை சிறப்பாக நடத்தும் நிர்வாகத்திறமை அவருக்கே உரிய பாணி எனலாம்.

மேலும் நேர்மை, கடமை, உணர்வு, சிறந்த ஆளுமை, மிகுந்த இறைபக்தி போன்ற அனைத்து நற்பண்புகளையும் தன்னகத்தே கொண்டவர். பாடசாலைக்கு எப்போதும் நேரத்துடனேயே வரும் பண்பு ஏனையோருக்கு ஒரு முன்மாதிரி என்பதில் ஐயமில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக " மனிதாபிமானம்" என்ற அரிய பண்புடன் அதிபராகச் செயலாற்றி ஓய்வுபெறும் எம் அதிபர் ஓய்வுக் காலத்தில் குடும்பத்துடன் மகிழ்ச்சி மற்றும் ஆரோக்கியமாகவும் வாழ மனதார வாழ்த்துகின்றேன்.

திருமதி.மைதிலி ஸ்ரீஸ்கந்தராசா,
பிரதி அதிபர்.

## வாழ்த்துச் செய்தி



எமது பாடசாலையில் அதிபராகக் கடமையேற்று மாணவர்களின் கல்வியில் பல சாதனைகளை நிலைநாட்டியதுடன் மாணவர்களின் ஒழுக்கம், விழுமியம் மற்றும் இணைப்பாடவிதானம் சார்ந்த சகல பயிற்சிகளையும் அவர்கள் அடைவதற்கு வழி சமைத்து ஓர் தனித்துமான முத்திரையைப் பதித்து நின்றவர் திரு.ச.வேலழகன் அவர்கள்.

இத்தகைய பண்பாளர் அவர்கள் தமது ஓய்வு பெறும் அகவையில் கௌரவிக்கப்படுவது சாலப்பொருந்துவதாகும். இவர் தம் ஓய்வுநிலை வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று நிறைவான வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி அவரை வாழ்த்துகின்றேன்.

திரு.வேலுப்பிள்ளை குணசீலன்,அதிபர்,
யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்.


## வாழ்த்துச் செய்தி



கல்லூரியின் முதல்வரும் பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமாகிய திரு.ச. வேலழகன் பழையமாணவர் சங்கத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு எமக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி யிருந்தார். பழைய மாணவர் சங்கத்திற்கும் ஆசிரியர்களுக் குமிடையே ஆரோக்கிமான உறவு நிலைக்க காரண கர்த்தாவாக திகழ்ந்தார். கோப்பாய் தலைமையகம், கொழும்பு மற்றும் பிரித்தானியா பழைய மாணவர் சங்கத் துடன் நல்லுறவைப் பேணி கல்லூரியின் தேவைக்களை பூர்த்தி செய்தார். எனவே இச் சந்தர்ப்பத்தில் திரு.ச. வேலழகன் அவர்களின் ஓய்வுக் காலம் சிறக்கவும் ஆரோக்கியம் பெருகி மகிழ்ச்சியாக அமையவும் கல்லூரித் தாயையும் எல்லாம் வல்ல இறைவனையும் வேண்டிப் பிரார்த்தனை செய்கின்றேன்.

சி. சுகிர்தரூபன், (J.P) செயலாளர், கோப்பாய்
தலைமையக பழைய மாணவர் சங்கம்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

## வாழ்த்துச் செய்தி



எதையும் தாங்கும் இதயம் கொண்டவர் திரு.ச.வேலழகன் என்றால் மிகையாகாது. நேர்மை, அமைதி, தன்னடக்கம் போன்ற பண்புகளை தன்னகத்தே வைத்து மாணவர்களும் அப்பண்புகளுடன் வாழ ஒரு முன்னுதாரணமாக செயற்பட்டவர்.

மாணவர்களின் கல்வி மற்றும் ஏனைய செயற்பாடுகளில் அதிகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். இவரிடம் கல்வி கற்ற பலர் இன்று பல்வேறு துறைகளில் இருக்கிறார்கள் என்பதே இதற்குச் சான்று. இவர் தம் பணிகளை திறம்படச் செய்ய இறைவன் கொடுத்த அருளுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். ஓய்வு நிலையிலும் அவர் சுகத்தோடும் மனமகிழ்வோடும் வாழ வேண்டும் என்று வாழ்த்தி, இறைபாதம் வணங்கி நிற்கின்றேன்.

அருட்பணி N.J.ஞானகாருண்யன்,
புனித மரியாள் ஆலயம், கோப்பாய்.

## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



வன்னிநகர்ப்பகுதிகளிலும் வலி.கிழக்குப் பகுதிகளிலும் கல்வி கற்றும் கற்பித்தும் தன் தொழிலில் சிறந்த பண்பாளன், சிறந்த தலைமைத்துவப் பண்புகளை தன்னகத்தே கொண்ட திரு.ச.வேலழகன் அப்பண்புகளை ஆசிரியர்களும் அரிய மாணாக்கர்களுக்கும் அள்ளி வழங்கும் அருளாளன் ஆவார். தான் பணியாற்றிய பாடசாலைகளில் அவர் பணி தொடரும் நற்பண்புகளை அவதானிக்க முடியும்.

சிரித்த முகமும் மிகுந்த துணிவும் எல்லாவற்றிற்கும் மேலாக சுறுசுறுப்பும் கொண்ட அதிபர் வேலழகன் அன்புடன் நட்புறவைப் பேணுவதில் முதன்மையானவர். அவரது அறிவு, ஆற்றல், அனுபவம், அயராத உழைப்பு காத்திரமானது. இப் பாடசாலையின் கல்விப் பெறுபேறுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறப்பாக அமைந்துள்ளமையும் கல்விக்குப் புறம்பான சமூக மட்டங்களிலும் பல்வேறு செயற்றிட்டங்களில் தன்னை இணைத்துப் பாடசாலைக்கு அர்ப்பணிப்பாக செயற்பட்டவர் ஆவார். தனது ஓய்வுக்காலத்தில் உடல், உள நலத்துடன், தன் குடும்பத்தினரோடும் சுற்றங்களுடனும் பல்லாண்டு காலம் வாழ்ந்து தொடர்ந்து கல்வி, சமூகப் பணிகளை முன்னெடுக்க எம்பெருமான் துணைபுரிவாராக.

திரு.பொ.ரவிச்சந்திரன்,
வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

## மனநிறைவுடன் சேவை செய்யும் அதிபர்



புகழ்பூத்த யாழ்/கோப்பாய் இந்துக் கல்லூரி பற்பல கல்விமான்களை உற்பத்தி செய்து இன்றும் தனது தளராத பணியை தொடர்கின்றது. நான் அறிந்த காலம் தொட்டு சேவை மனப்பாண்புடனும் அர்ப்பணிப்புடனும் தூர நோக்கு சிந்தனையுடனும் பல அதிபர்களை இந்தக் கல்லூரி தாய் தன்கடமை செய்ய பணித்திருந்தாள். இந்த தொடரில் திரு.சண்முகநாதன் வேலழகன் அதிபர் அவர்களும் தனது பணியைச் சிறப்பாகச் செய்து மன நிறைவுடன் ஓய்வுக்காலத்தை அடைந்திருக்கின்றார். எங்கள் அதிபர் அவர்கள் இலங்கை வங்கி மூலமாக பாடசாலை மாணவர்களுக்கு நன்மை கிடைப்பதில் உறவு பாலமாக இருந்து வந்து இருக்கின்றார். யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் தொடக்கம் இராணுவக் கெடுபிடி இருந்த போதும் தனது பணியை முடிந்தவரை வெற்றிகரமாக கொண்டு நடத்தியவரும் அந்த பாடசாலையில் இருந்து தொடங்கிய எமது வங்கி உறவு பாலம் கிறிஸ்தவ கல்லூரியை வளர்த்து விட்டது. அவரது சேவை மனப்பான்மை மிக உயர்ந்தது. அளவிட முடியாமல் கதைக்க முடியும்.

அதிபர் தனது ஓய்வுக்காலத்தில் மனநிம்மதியுடனும் சந்தோசமாகவும் இறை பக்தி கிடைக்கவும் எல்லாம் வல்ல இறைவனை மனதார பிரார்த்திக்கின்றேன்.

மு.தவபாலன், முகாமையாளர்,
இலங்கை வங்கி, கோப்பாய்.

## சிறந்த சேவையாளர்



எங்கள் கல்லூரியின் மீது மிகுந்த பற்று வைத்து நீண்டகாலமாக பெற்றோர் எல்லோரையும் அன்புடன் இணைத்து கல்லூரியின் செயற்பாடுகளை மிகச் சிறப்பாக நடத்திய அதிபர் தன்னுடைய மகத்தான பணியை நிறைவு செய்கின்ற வேளையிலே பெற்றோர் சார்பாக உங்கள் பணியை நாம் உயர்வுடனே உள்ளமதில் கொள்கிறோம்.

எமது அதிபரை நாம் எப்பொழுதும் பாடசாலையில் சந்திக்க கூடியதாக முழுநாளும் சேவைபுரிபவர். கல்லூரிச் செயற்பாடுகளை திட்டமிட்டு முன்னெடுப்பது இவரின் தனிக்கலை. இதனால் எமது கல்லூரி அதிபரின் வழிகாட்டலில் கல்வியிலும் இதர செயற்பாடுகளிலும் முன்நிலை பெற்றது.

நிறைவான பணிமூலம் எமது மனங்களை வென்ற உங்களை எமது சிரம் தாழ்த்தி நன்றி கூறி நிற்கும் நாம் உங்கள் வாழ்வு மேலும் சிறக்க இறைவனிடம் இறைஞ்சுகிறோம்.

சி.சுதாகரன், செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.


## வாழ்த்துரை



திரு.ச. வேலழகன் அவர்கள் அன்புடனும் இன்முகத்துடனும் சகலரையும் வரவேற்று உபசரிக்கும் பண்பும் நல்ல விழுமியக் கருத்துக்களை ஏனையோருக்கு வழங்கும் தன்மையும் எல்லோரையும் கவரக்கூடிய சிறந்த பேச்சாளராகவும் சிறந்த அதிபராகவும் செயற்பட்டவர் என்றால் மிகையாகாது.

இப்பாடசாலையில் பௌதீக வளங்களைப் பெருக்குவதிலும் மாணவர்களின் உளநல வளர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் முன்னின்று உழைத்து இன்று ஓய்வு பெறும் நாயகனை நீண்ட ஆயுளுடனும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீண்ட காலம் வாழ வாழ்த்துவதில் பழைய மாணவி என்ற ரீதியில் பெருமகிழ்வடைகின்றேன்.

திருமதி.சாந்தினி வாகீசன், பழையமாணவி,
[illegible]



## திரு.சண்முகநாதன்

இலங்கை அதிபர் சேவை I(

ஆரம்பக் கல்வி (1-5) யா/வளலாய் அமெரிக்கன் மிசன்

இடைநிலைக் கல்வி (6-13 யா/இடைக்காடு ம

ஆசியர் முதல் நியமனம் : 19

ஆசிரியர் பயிற்சி: கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்

இலங்கை அதிபர் சேவை நியமன

கல்வி மாணி கற்கை (B.Ed): தேசிய கல்வி

ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி

இலங்கைத் திறந்த பல்கலைக்கழ

### சேவை விபரம்:

வ/சேமமடு படிவம் 2 அ.த.க.பாடசாலை 1989.11.27-

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - கோப்பாய் 1993.03.24-

வ/சேமமடு படிவம் 2 அ.த.க.பாடசாலை 1995.01.01-

வ/நொச்சிக்குளம் இல1, க.உ.வித்தியாலயம் 1998.0

யா/நீர்வேலி றோக.த.க.பாடசாலை 2004.08.04-20

யா/அச்செழு வைசப்பிரகாச வித்தியாலயம் 2007.11.

யா/கோப்பாய் கிஸ்தவ கல்லூரி 2014.01.20-2023-

## பணிநிறைவு வாழ்த்துக்கள்



விழா நாயகனின் முதலாவது பாடசாலையில், அவரது சேவைக்காலத்தின் பின்னர் அதிபராகக் கடமை புரிந்தவன் என்ற வகையில் அவரது ஆரம்பகால சேவைக் காலப்பகுதி அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்ள விளைகிறேன். வவுனியா நகரப்பகுதியிலிருந்து 25 கிலோ மீற்றர் தொலைவில் போக்குவரத்து வசதி குறைந்த மின்சாரம் உட்பட அடிப்படை வசதிகளற்ற அதிகஷ்டப் பிரதேசமான சேமமடு படிவம் 2, அ.த.க பாடசாலையில் ஆசிரியராக கடமையிலிருந்து அதிபர் 1991 இல் ஓய்வு பெற்றதும் பாடசாலையின் பதிலதிபராகப் பொறுப்பேற்றுள்ளார். இக் கிராமத்திற்கான போக்குவரத்து வசதியீனங்களைக் காரணம் காட்டி அநேக ஆசிரியர்கள் இப்பாடசாலைக்குச் செல்லத் தயங்கிய நிலையில், இரண்டு நிரந்தர ஆசிரியர்களுடனும் இரண்டு தொண்டர் ஆசிரியர்களுடனும் நிறைவான கல்விப் பணியாற்றிய விழா நாயகனின் பணியின் சிறப்பாக 1992 இல் ஒரு மாணவன், 1993 இல் ஒரு மாணவன், 1995 இல் 5 மாணவிகள் என புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றமை பெருமைக்குரிய விடயமாகும்.

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெறுபவரும் எனது நண்பரும் ஆகிய திரு.ச.வேலழகன் அவர்கள் ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்தவருடன் சிறந்த ஆரோக்கியத்துடன் சீரும் சிறப்புமாக நீடூழி காலம் வாழ வாழ்த்துகிறேன்.

திரு.க.கந்தவனேசன்,
(முன்னாள் அதிபர்- வ/சேமமடு படி 2, அ.த.க பாடசாலை) அதிபர் -வ/கல்மடு 2 அ.மு.க.பாடசாலை.



அவரது இல்
கல்லூரிக்கு
என வாழ்த்
காலத்திற்கு
வழங்கி வரு
உயர்த்துவத
ழகன் அவர்
நடத்திவந்த
தெரிவித்துக்
யில் அதிபரா
காலம் அதிப
கிறார். இந்நில
சீரும் சிறப்பு
வேண்டி என
திரு.பொ.
பழைய மா

## வாழ்த்துச் செய்தி



தனது அதிபர் சேவையை நிறைவு செய்து ஓய்வு பெறும் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர்.திரு.ச.வேலழகன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன்.


விழாநாயகனை வவுனியா கல்வி வரலாற்றில் அதிகஷ்ட பகுதிகளில் ஆசிரியராக, அதிபராக அரும்பணியாற்றிய 2004 ஆம் ஆண்டில் விழா நாயகன் தனது சொந்த இடமான யாழ்.மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் வரை, வவுனியா வடக்கு வலயத்தில் கடமையாற்றிய 15 வருடங்களில் அதிகஷ்டப் பிரதேசத்தில் 9 வருடங்களும் கஷ்ட பிரதேசத்தில் 6 வருடங்களும் கடமையாற்றியுள்ளார். இதில்

பெரும்பாலான க
காலமாகும் என்
இல.1, க.உ.வி
யாற்றியவன் எ
யா/கோப்பா
பணியாற்றி ஓய்
ஓய்வுக் காலத்
ஆரோக்கியத்து
கின்றேன்.

வ/நெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவ கல்லூரி அதிபர்
# சேவைநலன் பாராட்டுவிழா சிறப்புமலர்



Mr.S.VELALAGAN

## தன் வேலழகன்

சேவை I(SLPS 1)

கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை
டக்காடு மகாவித்தியாலயம்)
மனம் : 1989
பயிற்சிக் கலாசாலை 1993/1994
வ நியமனம்: 2002
சிய கல்வி நிறுவகம் 2005
லமாணி (MATE-Int):
லைக்கழகம் 2015

பிரம்:
89.11.27-1993.03.23 ஆசிரியர்
93.03.24-1994.12.31 ஆசியர் பயிலுநர்
95.01.01-1998.01.31 பதிலதிபர்
ம் 1998.02.01-2004.08.03 அதிபர்
08.04-2007.11.18 அதிபர்
2007.11.19-2014.01.19 அதிபர்
20-2023-12.31 அதிபர்



### மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.சண்முகநாதன் வேலழகன் அவர்களின் பணிநிறைவு வாழ்த்துரை வழங்குவதனையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

34 வருடங்கள் ஆசிரியராகவும் அதிபராகவும் தன்னை அர்ப்பணித்து கல்விச் சமூகத்திற்கு அரும்பணியாற்றியவராவார். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் 09 ஆண்டுகள் அதிபராக கடமையாற்றியவர். இவர் அதிபராக இருந்த காலத்தில் பாடசாலையானது கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சாதனைகளை நிலைநாட்டியுள்ளமை கண்கூடாகும். நற்பண்புகளும் நல்லொழுக்கமும், நேர்மனப்பாங்கும், சமூக விழுமியங்களை மதித்து நடக்கும் மாணவ சமுதாயத்தை உருவாக்கும் அதிபர், ஆசிரியர்கள் போற்றப்பட வேண்டியவர்களாவர். அவ்வகையில் திரு.ச.வேலழகன் அவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டுள்ளதுடன் ஆற்றிய கல்விப் பணியானது சிறப்புடன் நினைவுகூரப்பட வேண்டியதாகும்.

இவரது கல்விப் பணியை பாராட்டுவதுடன் இவர் ஓய்வுக்காலத்தில் இன்னும் பல கல்வி மற்றும் சமூகப் பணிகளை மேற்கொண்டு நீண்ட ஆயுளுடன் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்கவேண்டிப்பிரார்த்திக்கின்றேன்.

தி.ஜோண் குயின்ரஸ்,
மாகாணக்கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.



### வாழ்த்துச் செய்தி

எமது J/261 கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் பிரபலமான பாடசாலையாகிய யாழ்/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபராக கடமையாற்றிய திரு. ச. வேலழகன் அவர்களை கௌரவித்து வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வும் மன நிறைவும் அடைகின்றேன். தமிழ்க்கடவுள் முருகனின் பெயரையும் அவனது அழகையும் தனது பெயரில் இணைத்து வேலழகன் என்னும் பெயருடன் தமிழ் மக்களின் எதிர்காலமாகிய எமது பாடசாலை சிறார்களின் எதிர்காலத்தை மையப்படுத்தி அவர்களின் நலன் மீது பூரண அக்கறை கொண்டு மாணவர் வரவு,ஒழுக்கம், கல்வி, விளையாட்டு, கல்வி சாரா செயற்பாடுகள் என மாணவர்களின் தேவையறிந்து செயற்படும் அதிபராக கடமையாற்றும் சேவை நலன் பாராட்டுவிழா காணும் நாளில் வாழ்த்தி மகிழ்வதுடன் அவரது ஓய்வுக்காலம் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் சாந்தமாகவும் அமைய இறைவனை வேண்டுகின்றேன்.

ப. தயாறூபன்,
கிராம அலுவலர், J/261 கோப்பாய் மத்தி.



### மனித மனங்களுடன் இணைந்த நிர்வாகி

எங்கள் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திரு.ச.வேலழகன் அவர்கள் ஒரு சிறந்த மனிதநேயம் மிக்க நிர்வாகியாவார். இவர் ஏறத்தாழ 34 வருடங்கள் கல்விப்புலத்திலே தனது காத்திரமான பங்கை வகித் துள்ளார். இதில் அவர் அதிபர் பதவியிலே அதிக காலம் பணிபுரிந்து பலபிரதேசத்து மாணவர்களையும் தன்னுடைய நிர்வாகத் திறமையால் உயர்வடையச் செய் துள்ளார். இவர் எமது கல்லூரியில் ஏறத்தாழ பத்து வருடங்கள் அளப்பரிய பணிபுரிந்து தனது தடங்களை அழியாமல் கல்லூரி வரலாற்றில் பதித்துள்ளார். இவருடைய காலத்தில் கல்லூரி மாண வர்கள் கல்வி, ஒழுக்கம், இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளில் தமது திறமைகளை நிலைநாட்டியுள்ளனர்.

இவரின் பணி நிறைவை ஏற்று நாம் மனநிறைவுடன் அவரை இக்கல்லூரியிலிருந்து வழியனுப்பி வைப்பதுடன் இவர் ஓய்வுக்கால வாழ்விலும் மகிழ்வாக, நீண்ட ஆயுளுடன் சிறப்பாக வாழ வாழ்த்துகிறேன்.

பா.லோகேஸ்வரன்,
ஆசிரியர் கழகம், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.




### உயர்ந்த சேவையாளனே வாழி

ஒரு நிறுவனத்தின் வெற்றியும் தோல்வியும் அந்நிறுவனத்தின் தலைமைத் துவத்தில் பெரிதும் தங்கியுள்ளது. அந்த வகையில் யா/நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் அதிபராக இருந்த காலப்பகுதியில் (04.08.2004-19.11.2007) பாடசாலையில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளும் இணைப் பாடவிதான செயற்பாடுகளும் மிக வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்தன.

இவருடைய காலப்பகுதியில் இப்பாடசாலையின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடியதை எவரும் மறந்து விடமாட்டார்கள். அது மாத்திரமல்லாமல் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கி அதன் மூலம் பாடசாலையின் பௌதீக வளத்தைப் பெற்று பாடசாலை வளரீதியாக வளர்ச்சி பெறச்செய்தவர். இவ்வாறான ஓர் அதிபர் இளைப்பாறுவது கல்வி சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாது இருந்தாலும் அவரது சேவை சமூக சேவையாக எமது சமூகத்திற்க கிடைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன் அவரது எதிர்கால வாழ்விலும் பல வெற்றிகள் கண்டு பெருமை பெற்று நோய் நொடி இன்றி நீடுழி காலம் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

திரு.சி.தர்மரத்தினம், அதிபர்,
யா/ நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை.



### சிறந்த நிர்வாகியும் சீரிய பண்பாளனும்

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபர் திரு.ச.வேலழகன் அவர்களது சேவை நயப்பில் அவரின் வரலா்ற்றுப் பதிவை உள்ளடக்கிய வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் உவகையடைகின்றேன். வேலானது கூர்மையானது, அறிவார்ந்தது, ஆழமான பொருளுடையது என்பது போல் திருவேலழகன் அவர்களது அறிவு, அனுபவம், நிர்வாகத்திறன், பண்பு என்பனவும் பெயரிற்கு ஏற்றால் போல் அமைந்து காணப்படுவது தனிச்சிறப்பாகும். தனது சிறப்பான முகாமைப்பன்மைத்துவம் ஊடாக கல்லூரியின் அனைத்து துறைகளையும் நெறிப்படுத்தியுள்ளார். அந்தவகையில் கல்வி அபிவிருத்தியையும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளையும் சமாந்தரமாக முன்னெடுத்துள்ளார். லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் பேருதவியினைப் பெற்று க.பொ.த சாதாரண தர மாணவர்களின் அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்காக மதிய உணவுத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியிருந்தார்.

அத்துடன் க.பொ.த.உயர்தர கணித, விஞ்ஞான மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களை பிரத்தியேக வளவாளர்களை பயன்படுத்தி மேலதிக வகுப்புக்களையும் நடத்தியிருந்தார். இதன் பயனாக பொறியியல்பீடம், அளவையியல் விஞ்ஞானம் (Surve.. Science), ICT விஞ்ஞானம் , Nuresiny Bsc விவசாயம் போன்ற விஞ்ஞான துறைகளுக்கும் கலைத்துறை, நுண்கலைத்துறை போன்ற துறைகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் மற்றும் கல்வியியல் கல்லூரிகளுக்கும் மாணவர்களை வருடாவருடம் அனுப்பி வைத்த பெருமைக்குரியவராவார். மேலும் கல்லூரி வரலாற்றில் மாணவர் படையணியை (கடேற்) உருவாக்கி வழிநடத்தியதுடன் விளையாட்டு, விழாக்களில் அதன் அணிவகுப்பை நிகழ்த்தி காட்டி கல்லூரியின் வரலாற்று பெருமைக்கு வலுச்சேர்த்திருந்தார். அத்துடன் சாரணர் அமைப்பையும் வலுப்படுத்தியதுடன் ஏழு மாணவர்கள் (5 Boys, 02 Girls) ஜனாதிபதி விருது பெற வழிவகுத்துள்ளார்.

கல்லூரியை சிறந்த முறையில் நிர்வகிப்பதற்கு ஆதாரமாக இலங்கை கல்வி அமைச்சும் AAT நிறுவனமும் இணைந்து வருடாவருடம் நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான கணக்கு வைப்பு மதிப்பீடு போட்டியில் 2018, 2019 ஆகிய ஆண்டுகளில் சிறந்த கணக்கு வைப்புக்கான பாராட்டினை BMICH மண்டபத்தில் பெற்றுக் கொண்டது பெரும் சிறப்பாகும். மாணவர்களின் செறிவை அதிகரிக்கும் நோக்கில் ஏற்கனவே நிறுத்தப்பட்ட ஆரம்ப கல்வி வகுப்புக்களை மீண்டும் கல்லூரியில் ஆரம்பிப்பதற்கான நிர்வாக அணுகுமுறையை மேற்கொண்டிருந்தார். கொரோனா நோய் பரவல் காலத்தில் மாணவர்களின் போசாக்கு நலனில் அக்கறை கொண்டு லண்டன் பழைய மாணவ சங்கத்தின் உதவியூடாக உலர் உணவு மற்றும் சோப்வகைகள் வழங்கியிருந்தார். இவ்வாறான சாதனைகளுக்கு சொந்தக்காரனை அதிபர் திரு.ச.வேலழகன் அவர்கள் ஓய்வுக்காலத்தில் உடல்,உள,ஆன்மிக ரீதியில் பலம்பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

பூ.ஸ்ரீஸ்கந்தராசா JP,
ஆசிரியர்-யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.


(18324)



### பிரதேச செயலாளரின் வாழ்த்துரை

திரு.வேலழகன் அவர்கள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கடமையாற்றுகின்ற காலத்தில் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படுகின்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளிற்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தவர். பல்வேறு தேவைகளுக்காக இப்பாடசாலையினை பயன்படுத்தி வருகின்றோம். வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள், உத்தியோகத்தர்களுக்கான விளையாட்டுப்பயிற்சி, பாரியளவிலான நடமாடும் சேவைகள், செயலமர்வுகள் முதலானவற்றை நாம் அவ்வப்போது நடத்துவதற்கு பாடசாலை வளாகத்தினை எவ்வித மறுப்புமின்றி வழங்கியுதவி இருந்தார். அதேபோன்று எம்மால் மேற்கொள்ளப்படும் சிறுவர்கள், மாணவர்கள் சார்ந்த செயற்பாடுகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

திருமதி.சுபாஜினி மதியழகன்,பிரதேசசெயலாளர்,
பிரதேசசெயலகம், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.



### வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரி அதிபர் உயர்திரு.சண்முகநாதன் வேலழகன் அவர்கள், நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தை கொண்டதும் பிரித்தானியர் காலம் முதல் தனித்துவத்துடன் விளங்கும் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியை 2014 அம் ஆண்டு பொறுப்பேற்று தனது கல்வி மற்றும் நிர்வாக முகாமைத்துவ திறன்களால் வளம் பெறச்செய்த பெருமதிப்புக்குரியவர். இவரது 20 வருட அதிபர் சேவை அனுபவம் வாயிலாக (வாழ்வில் உயர்ந்த நிலையினை அடைந்த மாணவர்கள் பலர்) வளம் பெற்ற பாடசாலைகள் பல. எமது கல்லூரி ஆளணியினர் அனைவருடனும் அன்பாகப் பழகி நிர்வாக நடவடிக்கைகளை திட்டமிட்டு பாடசாலை நிர்வாகத்தை இலகுவாக செயற்படுத்திக் காட்டியவர். ஓர் ஆசிரியராய் தனது சேவையை ஆரம்பித்து நல் அதிபராய், சிறந்த பேச்சாளராய், எழுத்தாளராய், ஆலோசகராய், வழிகாட்டியாய், தலைவராய் தனது ஆளுமையையும் வெளிப்படுத்திய பண்பாளர். தொடர்ந்தும் கல்விப்புலத்தில் அவரது சேவையும் ஈடுபாடும் தொடர வேண்டும். அவர் தன் குடும்பத்துடன் நீண்ட காலம் மகிழ்வோடு வாழ வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு.நடராஜசுந்தரம் ரகுநாத்,
பதில் அதிபர், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.



### வாழ்த்துச் செய்தி

செயற்கரியன செய்வார் பெரியார் என்ற ஆன்றோர் வாக்கிற்கு இணங்க அளப்பெரும் சேவைகள் செய்து எமது கல்லூரித் தாயின் வளர்ச்சியில் மைல்கல்லாக விளங்கிய அதிபர்கள் வரிசையில் தற்போது எமது கல்லூரியில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்கின்ற திரு.ச.வேலழகன் தனக்கென தனியிடம் பதித்துச் சென்றவர். இவர் அக் கல்லூரியின் அதிபராக பதவி ஏற்ற நாளில் இருந்து தனது சுய தேவைக்காக சேவை மூப்பு அடையும் முன்னரே ஓய்வு பெற்றுச் செல்லும் வரை இக்கல்லூரியின் வளர்ச்சியில் அயராது உழைத்தவர். எங்கள் மதிப்புக்கும் அன்புக்கும் பாத்திரமான எங்கள் அதிபர். எங்கள் பழைய மாணவர் சங்கத் தலைவர் ஓய்வுக்காலம் மகிழ்ச் சியாகவும் நோயற்ற வாழ்வாகவும் அமைந்து தனது ஓய்வுக்காலத்தில் பல சமூகப் பணிகள் புரிய வேண்டும் என்று இறைவனை வேண்டி வாழ்த்துக்கள் கூறுகின்றேன்.

சின்னத்துரை சுரேஸ்குமார்,
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி,
பழைய மாணவர்சங்கப் பொருளாளர்.



### கல்லூரிக்கு வளம் சேர்த்த சாதனையாளர்

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபர் திரு.சண்முகநாதன் வேலழகன் அவர்கள் தமது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்கின்றார். அவரது சேவை நயப்பு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எமது கல்லூரியின் கல்விப்பணி வரலாற்றில் தடம்பதித்த அதிபர்கள் பலர். திரு.ச.வேலழகன் அவர்கள் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். அவருடன் நான்கு வருடங்களுக்கு மேலாக கடமையாற்றும் போது அவரிடம் காணப்பட்ட பொறுமை, அன்பு, தன்னடக்கம், தனக்கு கீழ் சேவையாற்றுபவர்களிடம் காட்டும் மதிப்பு என்பவற்றைக் கண்டு வியந்திருக்கின்றேன்.

மாணவர்களுடனும் கல்லூரிச் சமூகத்தவருடனும் அன்புடன் பழகி கல்லூரியை வழிநடத்திச் சென்ற இவருடைய சேவைக்காலத்தில் கல்லூரிக்குத் தேவையான பௌதீக வளங்கள் பெருமளவு நிறைவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எமது கல்லூரியின் எதிர்கால வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை வழங்கிய அதிபர் திரு.சண்முகநாதன் வேலழகன் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் நோய் நொடியின்றி தனது குடும்பத்தவர்களுடன் மகிழ்ச்சியாக வாழ இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

திருமதி.இராஜினிதேவி சிவலிங்கம்,
ஓய்வுநிலை பிரதி அதிபர்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.





### வாழ்த்துச் செய்தி

அதிபர் திரு.ச. வேலழகன் அவர்களுடன் எமது சங்கம் 2014 ஆண்டு முதல் மிகவும் நெருக்கமாக எமது பாடசாலையின் வளர்ச்சிக்கான பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளோம். அந்த வேலைத்திட்டங்களை அடையாளம் காண்பதிலும் நிறை வேற்றுவதிலும் அதிபர் அவர்கள் எமக்கு பூரண ஒத்துழைப்பை நல்கி எமக்கு பேராதரவு வழங்கியமையை எமது சங்கம் நன்றியுடன் பாராட்டி நிற்கின்றது.

அதிபர் அவர்களின் ஓய்வு வாழ்க்கை மகிழ்வுடனும் உடல் நலத்துடனும் அமைந்து அதிபர் அவர்கள் நீடுழி வாழவென எமது சங்கத்தின் சார்பில் வாழ்ததுவதில் நிறைவடைகிறோம்.

திரு. மாணிக்கவாசகன் திருவாசகம், தலைவர்,
கலாநிதி.அரிராசசிங்கம், மகீதரன், செயலாளர்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
பழைய மாணவர் சங்கம் பிரித்தானியா.



### வாழ்த்துச் செய்தி

திரு.ச.வேலழகன் அவர்கள் 2014 ஆம் ஆண்டு கல்லூயில் அதிபராக பதவி ஏற்ற போது எமது சங்கத்தின் தலைவராக இருந்த கல்லூரியின் ஓய்வுக்கால அதிபர் அமரர். பூ.க. இராசரத்தினம் அவர்கள் அவரது இல்லத்திற்கு அதிபரை அழைத்து வரவேற்று கல்லூரிக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என வாழ்த்தி வழியனுப்பியிருந்தார். அதற்கமைய காலத்திற்கு காலம் எமது பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகிறோம். கல்லூரியின் கல்வி தரத்தை உயர்த்துவதற்கு அயராது பாடுபட்டார். திரு.ச.வேலழகன் அவர்கள் எமது பாடசாலையை திறமையாக நடத்திவந்தமையையிட்டு எமது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் எமது கல்லூரியில் அதிபராக கடமையாற்றியவர்கள் மத்தியில் அதிக காலம் அதிபராக கடமை புரிந்து ஓய்வு பெற்றுச் செல்கிறார். இந்நிலையில் ஓய்வுக்காலத்தில் குடும்பத்தாருடன் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

திரு.பொ. விக்னேஸ்வரலிங்கம்,செயலாளர்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.
பழைய மாணவர் சங்கம், கொழும்பு கிளை.

நம்பாலான காலப்பகுதி யுத்தகால நெருக்கடி மிகுந்த மாகும் என்பதை பின்னாளில் வ/நொச்சிக்குளம் .1. க.உ.வித்தியாலயத்தில் அதிபராகக் கடமை ற்றியவன் என்ற வகையில் குறிப்பிடுகின்றேன்.

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபராகப் ரியாற்றி ஓய்வு பெறும் திரு.ச.வேலழகன் அவர்கள் வுக் காலத்தில் தமது குடும்பத்தவருடன் சிறந்த ரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ வாழ்த்து றேன்.

திரு.இ.தனபாலசிங்கம்,
ஓய்வு நிலை அதிபர்,
வ/நொச்சிக்குளம் க.உ.வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர் வெடித்தால் என்னால் மட்டுமே தடுக்க முடியும்

## ட்ரம்ப் எகத்தாளம்



**(வோஷிங்டன்)**

**மூன்றாம் உலகப்போர் விரைவில் வெடிக்கவிருப்பதாகவும் அதைத் தடுக்க தன்னால் மட்டுமே முடியும் எனவும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

2024 ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் அவர் இதனை கூறியுள்ளார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ட்ரம்ப் தகுதியற்றவர் எனக் கொலாராடோ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந் நிலையில் தான் பொறுப்பில் இருந்தால் மூன்றாம் உலகப்போரைத் தடுக்க முடியும் எனக் கூறியிருந்தார்.


தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் வெளியுறவுக் கொள்கைகளைக் குற்றம் சாட்டிய ட்ரம்ப், அணுசக்தி போர் நடைபெறுவதற்கான அச்சுறுத்தல்கள் அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.


"மேலும் மூன்றாம் உலகப்போர் வெறும் இராணுவங்களுக்கு இடையேயான சண்டையாக முடிந்துவிடாது, உலகையே அழித்துவிடும் எனவும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதோடு "ட்ரம்ப் பிரதமராக இருந்திருந்தால் உக்ரைனிலும் ஐரோப்பாவிலும் போரே நடந்திருக்காது" என ஹங்கேரியின் பிரதமர் விக்டர் ஓர்பன் கூறியதைச் சுட்டிக் காட்டினார். (5-6)

# ஒமிக்ரோன் வைரஸின் பிறழ்வே வேகமாக பரவிவரும் 'JN-1' வைரஸ்

## உலக சுகாதார நிறுவனம்



(வோஷிங்டன்)

கொவிட் 19 ஒமிக்ரோன் வைரஸின் துணை வகை BA2.86 இன் பிறழ்வே மிக வேகமாக பரவும் வைரஸ் வகை JN-1 என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

கேரளாவில் முதன் முதலில் கண்டறியப்பட்ட JN-1 எனப்படும் கொரோனா வைரஸின் புதிய திரிபு குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

கேரளாவில் மட்டுமின்றி சிங்கப்பூரிலும் இந்தக் கொவிட் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், முகக்கவசம் அணிவதன் மூலமும், நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பேணுவதன் மூலமும் இதனைத் தடுக்க முடியும் என உலக சுகாதார நிறுவனம் விளக்கமளித்துள்ளது.

அமெரிக்காவில் தற்போது கொவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவதாகவும், அதற்கு காரணம் JN-1 வைரஸ் திரிபு என்றும் தொற்றுநோயியல் நோய்கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது. (5-6)

# சீனா சுரங்க விபத்தில் 12 பேர் பலி, 13 பேர் காயம்



(பீஜிங்)

சீனாவில் நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட விபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஹெயிலோங்ஜியாங் மாகாணம், ஜிக்ஸி நகரிலுள்ள குன்யுவான் நிலக்கரிச் சுரங்கத்தில் விபத்து ஏற்பட்டதில் 12 தொழிலாளர்கள் உயிரிழந்ததுடன் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

சீனாவில் சுரங்க விபத்துக்கள் அடிக்கடி ஏற்பட்டு உயிர்ச்சேதம் ஏற்பட்டு வந்தது.

எனினும், சோங்கிங் பகுதியில் கடந்த 2020 ஆம் ஆண்டு ஏற்பட்ட 2 சுரங்க விபத்துகளில் 39 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து அந்த நாட்டில் சுரங்கப் பாதுகாப்பு விதிமுறைகளின் அமுலாக்கம் தீவிரப்படுத்தப்பட்டது. அதிலிருந்து சுரங்க விபத்து உயிரிழப்புகள் குறைந்தாலும் அத்தகைய சம்பவங்கள் அவ்வப்போது ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# செக் குடியரசில் துப்பாக்கி பிரயோகம்

## 10 பேர் பலி

(பிராக்)

மத்திய ஐரோப்பாவின் பிராக்கில் உள்ள பல்கலைக் கழகத்தில் டேவிட் கோசாக் என்ற 24 வயதுடைய மாணவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை துப்பாக்கி சூடு நடத்திய மாணவரும் அந்த சம்பவத்தில் உயிர் இழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் எந்த தீவிரவாத நோக்கத்துடனும் அமைப்புடனும் தொடர்புடையது இல்லை என செக் உள்துறை அமைச்சர் விட் ரகுசான் தெரிவித்துள்ளார்.

சம்பவம் நடந்த இடத்தில் பொலிஸார் ஆய்வு நடத்திவருவதாகவும் கட்டடத்திலிருந்து அனைவரும் வெளியேற்றப்பட்டு, தொடர் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



மேஷம்

அசுவினி, பரணி கிருத்திகை 1-ம் பாதம்

## 20.12.2023-06.03.2026

### அசுவினி அதிர்ஷ்ட நேரம் வந்தாச்சு

உங்கள் இராசிக்கு ஜீவன ஸ்தானமான 10 அம் இடத்தில் இதுவரை சஞ்சரித்த சனி பகவான் டிசெ.20. 2023 அன்று லாப ஸ்தானமான 11 அம் இடத்தில் சஞ்சரிப்பதால் உங்கள் எதிர்பார்ப்பு எல்லாம் நிறைவேறும் காலமாக இந்த லாபச்சனியின் காலம் இருக்கப் போகிறது.

ரத்தக்காரகர், யுத்தக்காரகர் என்று கூறப்படும் செவ்வாய் பகவான், ஞான மோட்சக்காரகன் கேது பகவான் அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு பொருளாதார நிலையில் இதுவரை இருந்த நெருக்கடி எல்லாம் விலகப் போகிறது. அரசு வகையில் நீங்கள் மேற்கொண்ட முயற்சிகளில் தடைகள் இருந்தாலும் இனி அனைத்திலும் லாபம் என்ற நிலையை அடைய இருக்கிறீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறுவதுடன் சுயதொழில் செய்து வருபவர்கள் லாபம் காணும் காலமாக இக்காலம் அமையும். பொன், பொருள் சேர்க்கையும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு விரும்பிய இடமாற்றம், பதவி உயர்வு என முன்னேற்றமான காலமாக இருக்கும்.

**அதிர்ஷ்ட காலம்**

சனிபகவான் சதயம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16. 2024 - ஜூன் 19. 2024 வரையிலும் மற்றும் நவ 4. 2024 - பெப். 27. 2025 வரையிலும் மிகப்பெரிய யோக பலனை பெறுவீர்கள். நீங்கள் நினைத்ததை எல்லாம் நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்புகள் உருவாகும். அபரிமிதமான வருமானம் உண்டாகும். புதிய வாகனம், சொத்து சேர்க்கை ஏற்படும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்பார்த்த பொறுப்பு, பதவி வந்து சேரும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் கேதுவால் உங்கள் செல்வாக்கு உயரும். எதிர்ப்புகள் அகலும். ஆரோக்கியம் சீராகும். வழக்குகள் வெற்றியாகும்.

ஏப்.26. 2025 முதல் ராகு கும்பத்திலும் கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் போது உங்கள் முயற்சிகள் எல்லாம் வெற்றியாகும். வருமானம் அதிகரிக்கும். அரசு வகையில் எதிர்பார்த்தவை வெற்றியாகும்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30. 2024 வரை உங்கள் ஜென்ம ராசியிலும் மே 1. 2024 முதல் மே 13. 2025 வரை ரிஷபத்திலும் மே 14. 2025 முதல் மிதுனத்திலும் குருபகவான் சஞ்சரிப்பார். இதில் அவர் ரிஷபத்தில் சஞ்சரிக்கும் ஓராண்டு காலம் முழுவதும் குடும்பத்தில் முன்னேற்றம், பொன், பொருள் சேர்க்கை, செல்வாக்கை உண்டாக்குவார்.

**தொழில்**

தொழிலில் இருந்த தடைகள் விலகும். சிலர் புதிய தொழில் தொடங்குவீர்கள். லாபம் அதிகரிக்கும். இயந்திரம், எலெக்ட்ரானிக் தொழில்கள் முன்னேற்றம் அடையும்.

**பணியாளர்கள்**

உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லையே என்று வருத்தப்பட்டு வந்த நிலை மாறும். ஊதியம் உயரும் பதவி உயர்வு உண்டாகும். மேலதிகாரிகளின் ஆதரவு அதிகரிக்கும்.

**கல்வி**

கல்வியில் கூடுதல் கவனத்தை செலுத்துவதன் மூலம் எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்கும். ஆசிரியர்களின் ஆலோசனை உங்களை உயர்வடையச் செய்யும்.

**உடல்நிலை**

உங்களை அச்சுறுத்தி வந்த நோய்கள் மருத்துவத்தால் விலகும். ரத்தக் கொதிப்பு, சர்க்கரை போன்ற நோய்கள் கட்டுக்குள் வரும். ஆரோக்கியம் அதிகரிக்கும்.

**குடும்பம்**

குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். தம்பதியர் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். புதிய பொருட்களின் சேர்க்கையுடன் வாகன, சொத்து சேர்க்கையும் உண்டாகும்.

**பரிகாரம்**

சனிதோறும் சனீஸ்வரரை வழிபட்டால் வாழ்வு வளமாகும்.

### பரணி பணமழை கொட்டும்

உங்கள் இராசிக்கு தொழில், லாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனிபகவான் இதுவரை தொழில் ஸ்தானத்தில் சஞ்சரித்த நிலையில் டிசெ 20. 2023 முதல் லாப ஸ்தானமான 11ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் நன்மை அதிகரிக்கும். பணவரவு உண்டாகும். உயர்ந்த பதவிகள் இனி உங்களைத் தேடி வரப் போகிறது. நீங்கள் தொட்டதெல்லாம் துலங்கி உங்கள் நிலையை உயர்த்தப் போகிறது.

களத்திரம், கலை, அதிர்ஷ்டக்காரகன் என கூறப்படும் சுக்கிரன், பராக்கிரமக்காரகன் எனப்படும் செவ்வாயின் அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு இந்த சனிப் பெயர்ச்சியில் பணமழை கொட்டும். பெரிய அதிர்ஷ்ட வாய்ப்புகள் உண்டாகும். செல்வம், செல்வாக்கு, புதிய பொறுப்பு என நல்ல மாற்றங்களைக் காண்பீர்கள். புதிய வாகனம், வெளிநாடு செல்லும் யோகம், திருமணம், வாழ்க்கைத் துணையை இழந்தவர்களுக்கு புதிய துணை, தகுதிக்கேற்ற வேலை, திரைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள், தொழிலில் முன்னேற்றம், புதிய தொழில் தொடங்கி லாபம் காணும் நிலை, எடுத்த காரியங்கள் யாவிலும் வெற்றி என அதிர்ஷ்டமான காலமாக அமையும்.

**அதிர்ஷ்ட காலம்**

அவிட்டம் நட்சத்திரத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலமான டிசெ 20. 2023 - பெப்15. 2024 வரையிலும் பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 29. 2025 - ஜூலை 2, 2025 வரையிலும் நவம்பர் 17.2025 - மார்ச் 6. 2026 வரையிலும் உங்களுக்கு அதிர்ஷ்டங்களை உண்டாக்குவார். வாழ்க்கையில் இருந்த சங்கடங்கள் விலகும். முயற்சிகள் யாவும் வெற்றியாகும். பொன், பொருள் சேர்க்கை, வாகன யோகம் என விரும்பியவற்றை எல்லாம் அடைவீர்கள்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26. 2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் கேதுவால் உங்கள் வாழ்க்கை வளமாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், உத்தியோகத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும். ஆரோக்கியம் மேம்படும். ஏப். 26.2025 முதல் ராகு கும்பத்திலும் கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் நிலையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். தடைப்பட்ட வருவாய் வந்து சேரும். வெளிநாட்டுத் தொடர்புகள், முயற்சிகள் வெற்றியாகும். செல்வாக்கு அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையை இழந்தவர்களுக்கு மறுமணம் நடக்கும். பொன், பொருள் சேர்க்கையுடன் புதிய வாகனச் சேர்க்கையும் உண்டாகும்.

**குரு சஞ்சாரம்**

ஏப். 30. 2024 வரை உங்கள் ஜென்ம ராசியிலும் மே 1. 2024 முதல் மே 13. 2025 வரை 2 ஆம் வீட்டிலும் மே 14. 2025 முதல் 3 ஆம் வீட்டிலும் குருபகவான் சஞ்சரிப்பார். இதில் 2 ஆம் வீட்டில் சஞ்சரிக்கும் ஓராண்டு காலம் முழுவதும் யோகபலன்களை வாரி வழங்குவார். பொருளாதாரத் தடைகள் விலகும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு அதிகரிக்கும். விருப்பம் நிறைவேறும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடந்தேறும். வருமானம் பலவழியிலும் உண்டாகும். புதிய முயற்சி வெற்றியாகும்.

**பொதுப் பலன்**

வெளி வட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். எந்த ஒரு செயலிலும் திறம்பட செயற்பட்டு வெற்றி அடைவீர்கள். வெளிநாடு செல்வதற்காக மேற்கொள்ளும் முயற்சி நிறைவேறும். ஆன்மிகப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பாராட்டு கிடைக்கும். பணப்பற்றாக்குறை விலகும். கடன் அடைபடும். சிலருக்கு திருமண யோகம் உண்டாகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். வங்கியில் கேட்டிருந்த கடன் கிடைக்கும். அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். சிலருக்கு புதிய பொறுப்பு, பதவி வந்து சேரும்.

**தொழில்**

செய்யும் தொழில் லாபத்தை நோக்கிச் செல்லும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும். அரசு வழியில் எதிர்பார்த்த அனுமதியும் சலுகைகளும் கிடைக்கும். வாகனத் தொழில், ஸ்பேர் பார்ட்ஸ், எலெக்ட்ரானிக்ஸ் தொழில்களில் லாபம் அதிகரிக்கும். எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், ஆலோசகர்கள் முன்னேற்றம் காண்பர்.

**பணியாளர்கள்**

உழைப்பாளர்களின் நிலை உயரும். பணிபுரியும் இடத்தில் இருந்த சங்கடம் விலகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு ஏற்படும். வேலை தேடி வந்தவர்களுக்கு தகுதிக்குரிய பணி கிடைக்கும். உங்கள் ஆலோசனையை நிர்வாகத்தினர் ஏற்பர்.

**கல்வி**

மாணவர்களுக்கு கல்வியின் மீதான அக்கறை அதிகரிக்கும். சிலர் மேற்படிப்பிற்காக வெளிநாடு செல்வீர்கள். போட்டித் தேர்வுகளில் எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்கும். விரும்பிய கல்லூரியில் விருப்பமான பாடத்தில் இடம் கிடைக்கும். ஆசிரியர்களின் ஆலோசனையால் கூடுதல் நன்மை காண்பீர்கள்.

**உடல்நிலை**

தொற்று நோய்கள், பரம்பரை நோய்கள் என்று பாதிக்கப்பட்டிருந்த நிலையில் மாற்றம் உண்டாகும். சரியான மருத்துவரை சந்தித்து சிகிச்சை பெற்று குணமடைவீர்கள். படுக்கையில் இருந்து மருத்துவம் பெற்று வந்தவர்களும் இனி எழுந்து நடந்திடக் கூடிய நிலை உண்டாகும்.

**குடும்பம்**

குடும்ப உறவுகளிடம் இருந்த சங்கடம் விலகும். மூத்த சகோதரர்களால் உங்கள் எண்ணம் நிறைவேறும். தம்பதியர் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயற்படுவர். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து நடப்பர். சிலர் புதிய வீட்டில் குடியேற வாய்ப்புண்டு.

**பரிகாரம்**

துர்க்கை வழிபாடு நன்மையளிக்கும். வாழ்க்கையை வளமாக்கும்.

### கார்த்திகை 1 ஆம் பாதம் முயற்சி வெற்றியாகும்

ஆன்மகாரகனான சூரியனின் நட்சத்திரத்தில் நீங்கள் பிறந்திருந்தாலும் 1ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு பூமிக்காரகனான செவ்வாய் இராசிநாதனாகவும் 2,3,4 ஆம் பாதத்தினருக்கு மனக்காரகனான சந்திரன் இராசிநாதனாகவும் உள்ளனர். உங்கள் நட்சத்திர நாதனுக்கு சனி பகைவர் என்றாலும் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை முழுமையாக வழங்கிடக் கூடியவராகிறார்.

கார்த்திகை 1ஆம் பாதத்தினருக்கு சனி லாப ஸ்தானத்திலும் 2,3,4ஆம் பாதத்தினருக்கு ஜீவன ஸ்தானத்திலும் சஞ்சரிக்கிறார். இதனால் 1ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு சனி 11ஆம் வீட்டில் லாபம், யோகத்தை வழங்குபவராகவும் 2,3,4ஆம் பாதத்தினருக்கு 10ஆம் வீட்டில் தொழில், உத்தியோகத்தில் உழைப்பை அதிகரித்திடக்கூடிய நிலையை உண்டாக்குபவராகவும் இருக்கிறார்.

**அதிர்ஷ்ட காலம்**

சனிபகவான் சதயம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16. 2024 - ஜூன் 19. 2024 வரையிலும் மற்றும் நவ.4. 2024 - பெப். 27. 2025 வரையிலும் 4 பாதங்களில் பிறந்தவர்களுக்கும் யோகப்பலன் வழங்கிடுவார். தொழில், உத்தியோகத்தில் விருப்பம் நிறைவேறும். வருவாய் அதிகரிக்கும். 2,3,4ஆம் பாதத்தினருக்கு அஸ்தமனம், வக்கிர காலங்களில் சங்கடங்களில் இருந்து பாதுகாப்பார். வழக்கமான செயல்களில் முன்னேற்றத்தை உண்டாக்குவார்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26. 2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் 1ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு கேதுவால் விருப்பம் நிறைவேறும். ஆரோக்கியம் சீராகும். வழக்கு வெற்றியாகும். எதிர்ப்பு விலகும். 2,3,4ஆம் பாதத்தினருக்கு ராகுவால் வியாபாரம், தொழிலில் லாபம் அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். செல்வாக்கு அதிகரிக்கும். ஏப்.26. 2025 முதல் ராகு கும்பத்திலும் கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் நிலையில் 1ஆம் பாதத்தினருக்கு ராகுவால் வரவு அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். புதிய பொறுப்பு வந்து சேரும் முயற்சி வெற்றி பெறும்.

**குரு சஞ்சாரம்**

ஏப்.30. 2024 வரை 1ஆம் பாதத்தினருக்கு ஜென்ம இராசியிலும் 2,3,4 ஆம் பாதத்தினருக்கு 12ஆம் இடத்திலும் மே1. 2024 - மே 13. 2025 வரை முதல் பாதத்தினருக்கு 2ஆம் வீட்டிலும் 2,3,4 ஆம் பாதத்தினருக்கு ஜென்ம ராசியிலும் மே 14. 2025 முதல் 1ஆம் பாதத்தினருக்கு 3ஆம் வீட்டிலும் 2,3,4 ஆம் பாதத்தினருக்கு 2ஆம் வீட்டிலும் குருபகவான் சஞ்சரிக்கிறார். 1ஆம் பாதத்தினருக்கு 2024 மே முதல் ஓராண்டுக்கு பொருளாதார முன்னேற்றத்தை உண்டாக்குவார். குடும்பத்தில் மகிழ்ச்சியை அதிகரிப்பார். முயற்சிகளில் வெற்றி வழங்குவார். 2,3,4 ஆம் பாதத்தினருக்கு மே 2025 முதல் யோகத்தை உண்டாக்குவார். செல்வாக்கை அதிகரிப்பார். கொடுத்த வாக்கை காப்பாற்றும் நிலையை வழங்குவார். சமூகத்தில் செல்வாக்கை உயர்த்துவார்.

**பொதுப்பலன்**

தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். அறிவாற்றல் அதிகரிக்கும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி பெறும். எதிர்பார்த்த உதவிகள் சரியான நேரத்தில் வரும். தொழிலில் கூடுதல் கவனம் செலுத்தி முன்னேற்றத்தை அடைவீர்கள். வெளிநாட்டிற்கு செல்ல நினைத்தவர்களின் முயற்சி வெற்றியாகும். பங்குச்சந்தையில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும்.

**தொழில்**

கார்த்திகை முதல் பாதத்தினருக்கு லாபச் சனியாலும் 2,3,4ஆம் பாதத்தினருக்கு லாப ராகுவாலும் எதிர்பார்த்த வருமானம் உண்டாகும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். புதிய முயற்சிகள் வெற்றியாகும். அரசு வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். ஏற்றுமதி, இறக்குமதி தொழில் முன்னேற்றம் அடையும். இண்டஸ்ட்ரியல், ஹார்டுவேர்ஸ், ஸ்டேஷனரி, கம்யூட்டர் வணிகம், வளர்ச்சி காண்பர். என்றாலும் முயற்சி அதிகமாக தேவைப்படும். தொழிலில் புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

**பணியாளர்கள்**

கார்த்திகை 1ஆம் பாதத்தினருக்கு பணிபுரியும் இடத்தில் மதிப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு உண்டாகும். 2,3,4ஆம் பாதத்தினருக்கு மறைமுக எதிர்ப்பு உண்டாகும். வழக்கு, விசாரணை என்ற நிலையும் சிலருக்கு உண்டாகும். மற்றவர்களின் விவகாரங்களில் தலையிடாமல் வேலையில் மட்டும் கவனம் செலுத்தினால் சிரமம் குறையும்.

**கல்வி**

ஆசிரியர்களின் ஆலோசனை வெற்றிக்கு வழிவகுக்கும். பொதுத்தேர்வு எழுதுபவர்கள் படிப்பில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண் பெற முடியும். சிலருக்கு வெளிநாட்டிற்கு சென்று படிக்கும் வாய்ப்புண்டாகும்.

**உடல்நிலை**

நீண்ட நாளாக இருந்த நோய்கள் மருத்துவ சிகிச்சையால் குணமாகும். அன்றாட பணிகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடக் கூடிய அளவிற்கு உங்கள் உடல்நிலை அமைந்திருக்கும்.

**குடும்பம்**

திட்டமிட்டு செயற்படத் தொடங்குவீர்கள். தம்பதியர் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செயற்படுவர். பிள்ளைகளின் நலனில் அக்கறை அதிகரிக்கும். சொத்து சேர்க்கை உண்டாகும். சிலர் புதிய வீட்டில் குடியேறுவர்.

**பரிகாரம்**

அதிகாலையில் சூரிய பகவானை வழிபட வாழ்வு வளமாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 361





இருபத்தாறாம்
அத்தியாயம்
இரத்தம் கேட்ட கத்தி

அந்த வீர வைஷ்ணவர் எப்படி அங்கு வந்து சேர்ந்தார் எதற்காக வந்திருக்கிறார் என்பதைப் பற்றி வந்தியத்தேவனுடைய உள்ளம் கலக்கமடைந்திருந்தது. ஆயினும் அதை அவன் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை.

"என்ன வேடிக்கையைச் சொல்வது? சற்று முன்னால் தான் உங்களைப் பற்றி நினைத்துக்கொண்டேன். நிமிர்ந்து பார்த்தால் தாங்கள் சுவரேறிக் குதித்து வருகிறீர்கள். 'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பொத்துக் கொண்டு கொடுக்கும்' என்று சொல்கிறார்களே, அது சரி தான்!" என்றான்.

"அப்பனே! சற்று முன்னால் என்னைப் பற்றி நினைத்தாயா? எதற்காக இந்த நரமனுஷனைப் பற்றி நீ ஏன் நினைக்க வேண்டும்? சாக்ஷாத் இராம பிரானைப் பற்றி நினைத்தாலும் பயன் உண்டு"

"தங்கள் வாய்க்குச் சர்க்கரைதான் போடவேண்டும். முதலில் நான் இராமபிரானைப் பற்றித்தான் நினைத்தேன். இங்கே வரும்போது கடலில் அக்கரையில் இராமேசுவரக் கோபுரம் தெரிந்தது. இராமர் அங்கேதானே சிவனைப் பூஜை செய்து இராவணனைக் கொன்ற பாவத்தைப் போக்கிக் கொண்டார் என்று எண்ணினேன்."

"நில்லு, தம்பி! நில்லு!"

"நிற்க முடியாது, சுவாமிகளே! என்னால் நிற்க முடியாது. நடந்து நடந்து, நின்று நின்று, என் கால்கள் கெஞ்சுகின்றன. தாங்களும் கருணை புரிந்து உட்காருங்கள். அப்புறம் இராமரைப் பற்றி நினைத்தேனா? உடனே இராம பக்தனாகிய அனுமாரைப் பற்றி நினைவு வந்தது. அனுமாரைப் பற்றி எண்ணியதும் தங்கள் நினைவு வந்தது. உடனே பார்த்தால், தாங்களே வந்து விட்டீர்கள். சுவரேறிக் குதித்து மட்டும் வந்தீர்களா, அல்லது அனுமாரைப்போல் கடலையே தாண்டிக் குதித்து வந்தீர்களா?"

"தம்பி மகா பக்த சிரோன்மணியான அனுமார் எங்கே? அடியேன் எங்கே? அனுமார் இந்த இலங்கைக்கு வந்து அக்ஷய குமாரன் முதலிய இராட்சதர்களை அதாஹதம் செய்தார். என்னால் கேவலம் ஒரு பூனைக்கு வழிசொல்ல முடியவில்லை. இதோபார்! எப்படி ஒரு பூனை என் கால்களைப் பிறாண்டி இரத்தக் காயம் செய்துவிட்டது!" என்று ஆழ்வார்க்கடியான் தன் கால்களில் ஏற்பட்டிருந்த காயங்களைச் சுட்டிக் காட்டினான்.

"அடடா! இப்படியா நேர்ந்துவிட்டது? ஆனால் கேவலம் ஒரு பூனையோடு தாங்கள் சண்டைக்குப் போன காரணம் என்ன?"

"நான் சண்டைக்குப் போகவில்லை. அதுவேதான் என்னுடன் வலுச்சண்டைக்கு வந்தது."

"அது எப்படி சுவாமிகளே!"

"உன்னைத் தேடிக்கொண்டு நான் வந்தேன். வாசற் காவலர்களை ஏமாற்றி கொல்லைப்புறச் சுவர் வழியாக ஏறிக் குதித்தேன். கீழே நான் கால்வைக்கிற இடத்தில் வேண்டுமென்று அந்தப் பூனை தன் வாலை நீட்டிக் கொண்டிருந்தது. என் கால் அதன் வாலை அப்படி இலேசாகத்தான் தொட்டது. இருந்தாலும் அந்தப் பொல்லாத பூனை தன் கால் நகங்களினால் என்னைத் தாக்கத் தொடங்கிவிட்டது. தம்பி! நான் சொல்வதைக் கேள்! புலியோடு சண்டை போட்டாலும் போடலாம் ஆனையோடு சண்டை போட்டாலும் போடலாம். பூனையோடு மட்டும் சண்டை போடக்கூடாது!"

"சுவாமிகளே! அந்த இரகசியம் எனக்கு இப்போது தெரிந்து போய்விட்டது."

"எந்த இரகசியம்?"

"அந்தப் பூனை இங்கே என் அறைக்கும் வந்தது. என் நெற்றியில் வாலினால் தடவிக் கொடுத்தது. என்னோடு கொஞ்சி விளையாடியது.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## அறிவுப்பானை



(நேற்றைய தொடர்ச்சி)

"உங்கள் மன்னருக்கு என் வாழ்த்துகளைத் தெரிவிப்பாய்!" என்ற அக்பர், "மன்னரிடமிருந்து எனக்கு ஏதாவது செய்தி உண்டா?" என்று கேட்டார். "பிரபு! உங்கள் தர்பாரில் பல அறிஞர்கள் நிறைந்துள்ளனர். அதனால் அறிவு நிரம்பிய ஒரு பானையை தயவு செய்து நீங்கள் கொடுத்தருளும் படி எங்கள் மன்னர் வேண்டிக் கொள்கிறார்" என்றான் தூதன். அதைக் கேட்டு தர்பாரில் இருந்தவர் வியப்படைந்தனர்.

அறிவை எப்படிப் பானையிலிட்டு நிரப்ப முடியும்? ஆனால் அக்பர் அதைப் பற்றி தீவிரமாக சிந்திக்கவில்லை. தன் தர்பாரில் ஏராளமான அறிஞர்கள் இருக்கையில், இந்த விஷயத்தை அவர்களே கவனித்துக் கொள்வார்கள் என்று விட்டு விட்டார். அதனால் அவர் வீரசிம்மன் விரும்பிய பொருள் ஒரு மாதத்திற்குள் அனுப்பப்படும் என்று தூதனிடம் சொன்னார்.

"பிரபு! உங்கள் கருணைக்கு எல்லையே இல்லை! உங்களுடைய ஆதிக்கத்திலிருப்பதை எண்ணி எங்கள் மன்னர் பெருமைப்படுகிறார்" என்று தூதனும் சாமர்த்தியமாக அக்பர் [illegible] குளிரும்படி பேசிவிட்டு, திரும்பிச் சென்றான்.

அவன் சென்ற பிறகு, அக்பர் தன் தர்பாரிலிருந்த அறிஞர்களை நோக்க அவர்களுள் ஒருவர் "பிரபு! வீரசிம்மன் கேட்டிருப்பதை கொடுக்க முடியவே முடியாது" என்றார். "முடியாதது என்று ஒன்றுமே கிடையாது. அதைக் கொடுத்தே ஆக வேண்டும்" என்று அக்பர் கோபத்துடன் கூறியதும், அனைவரும் பயத்தினால் ஒன்றும் பேசா[illegible]

"பிரபு!" என்று மெதுவாக அழைத்தவாறே எழுந்த பீர்பால், "எனக்கு ஒரு பதினைந்து நாள் அவகாசம் கொடுங்கள். இந்த சவாலை நான் சமாளிக்கிறேன்" என்றார். "நிச்சயமாக இதை வெற்றிகொள்ள முடியுமா?" என்று அக்பர் கேட்டார். "நான் எப்போதாவது சொல்லிவிட்டு செய்யாமல் இருந்திருக்கிறேனா?" என்று பீர்பால் திருப்பிக் கேட்டதும்,

"நல்லவேளை! என்னுடைய தர்பாரில் நீ ஒருத்தனாவது அறிவாளியாக இருக்கிறாயே!" என்று பீர்பாலைப் புகழ்ந்து விட்டு மற்றவர்களை ஏளனத்துடன் பார்த் தார்.

அன்று மாலை வீடு திரும்பிய பீர்பால், தன் தோட்டத்தை நன்றாகப் பார்வையிட்டார். மற்ற காய்கறிச் செடிகளுடன், ஒரு பரங்கிக் கொடியையும் பார்த்தார். அதில் பல பூக்கள், பிஞ்சுகள், காய்கள் இருந்தன. உடனே வீட்டிற்குள் சென்ற அவர் ஒரு காலிப் பானையை எடுத்து வந்தார். அதைத் தரையில் வைத்து விட்டு, பரங்கிக் கொடியில் பிஞ்சுடன் கூடிய ஒரு பகுதியை அந்தப் பானையினுள் நுழைத்து பரங்கிப் பிஞ்சு பானைக்குள் இருக்குமாறு செய்துவிட்டு, கொடியின் நுனியை வெளிப்புறம் நோக்கி இழுத்து விட்டார். பார்ப்பதற்கு, பறங்கிக் கொடி பானையினுள் புகுந்து, பிறகு வெளியே வந்தது போல் இருந்தது.

"சரியாக இருக்கிறது!" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்ட பீர்பால், தன் மனைவியிடமும், தோட்டக்காரனிடமும் அந்தப் பானையையும், பரங்கிக் கொடியையும் மிகவும் பத்திரமாகப் பாதுகாக்கச் சொன்னார். தினமும் அவர் தோட்டத்திற்கு வந்து பானையினுள் இருந்தப் பரங்கிப் பிஞ்சைப் பார்வையிட்டு வந்தார். பத்து நாள்களில் பிஞ்சு காயாகிப் பெருத்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளை அகற்ற ஒளி தேவை,மனதில்
அறியாமையை அகற்ற தன்னறிவு தேவை.
~ லோகு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இன்னும் துயிலுதியோ தமிழ் அரசியல் தலைவர்காள்

இது மார்கழி திருவெம்பாவைக் காலம். மார்கழி மாதம் குளிர்மிகுந்தது. இக்கடும் குளிர் காலத்தில் வைகறைத் துயில் எழுந்து இளம் பெண்கள் பள்ளியெழுச்சி பாடி தம் சக தோழிகளையும் நித்திரையால் எழுப்பி ஆடும் தில்லைக்கூத்தனைப் பாடிப் பரவுகின்ற காலம்.

ஆதலால் சைவ மக்களிடையே மார்கழித் திருவெம்பாவை சிவப்பரம்பொருளை விசேடமாகத் தொழுதேற்றுகின்ற விரதமாக அமைகிறது.

மணிவாசகப் பெருமான் பாடியருளிய திருப்பள்ளி எழுச்சியை வைகறைப் பொழுதில் பாடிய வண்ணம் அடியார் கூட்டம் செல்கின்ற அந்தக் காட்சி பக்திப் பரவசத்துக்குரியது.

சேமக்கலம், சங்கு, தீவட்டி சகிதம் அதிகாலை பொழுதில் கொட்டுகின்ற குளிரோடு "எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே" என்று பாடுங் கால் நம் வீடுகள் தோறும் சிவநாமம் ஒலிக்கும்.

ஆனால் இன்று அந்த நிலைமையைக் காண்பது அரிது. எங்கேனும் சிற்சில ஊர்களில் அந்தப் பழைமை பேணப்படுகின்றதாயினும் பெரும்பாலான இடங்களில் மார்கழித் திருவெம்பாவை என்பதன் அர்த்தமும் அதன் வெளிப்பாடும் மறக்கப்பட்வையாயிற்று.

என்ன செய்வது ஆன்ம ஈடேற்றம் தரவல்ல தெய்வ வழிபாடுகளை மறந்து வாழப் பழகிவிட்ட, மக்கள் சமூகத்தில் இழுந்தவைக்காகப் கவலைப்படுகின்ற உரிமை மட்டுமே நமக்குச் சொந்தமாக உள்ளது என்பதோடு அந்த மனவேதனையை ஒருபுறம் வைத்துக் கொள்ளலாம்.

இங்கு நாம் பேச வந்த விடயம் திருவெம்பாவை பற்றியதன்று. மாறாக திருப்பள்ளி எழுச்சியில் இன்னும் துயிலுதியோ... என்ற பாடல் அடி குறித்தே நம் கவனம் செல்கிறது.

ஆம், இன்னும் துயிலுதியோ என்ற மணிவாசகரின் வரிகள் மிகவும் அர்த்தமானவை. அந்த வரிகள் உறக்கத்தில் இருந்து விழிப்படைய வைப்பன.

இங்கு உறக்கம் என்பது அஞ்ஞான இருளில் மூழ்கிக் கிடப்பதைக் குறிப்பதாகும்.

அதாவது அறியாமை என்ற இருளில் இன்னும் கிடக்கத் தலைப்பிட்டீரோ. ஞானத்தைத் தரவல்ல அறிவைப் பெற்றுக் கொள்ளாமல், இருளில் கிடக்கின்ற உம் நெஞ்சம் வன்மையானது.

ஆகையால் பள்ளி எழு என்று அந்தப் பாடல் பொருள் தருகிறது.

இங்குதான் எங்கள் தமிழ் அரசியல் தலைவர்கள் இன்னும் துயில்கிறார்கள்.

இலங்கை ஆட்சியாளர்கள் நம் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு தருவார்கள் என்று நம்புகிறார்கள்.

அதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பார் என்று மூத்த தமிழ் அரசியல் தலைவர் இரா.சம்பந்தர் நம்புகிறார்.

கடவுளே! சம்பந்தர் ஐயா இப்போது 90 வயதைக் கடந்தபோதும் அவரிடம் அரசியல் ஞானம் ஏற்படவேயில்லை.

பாவம் இன்னும் சிங்களப் பேரினவாதிகள் நம் பிரச்சினையைத் தீர்ப்பார்கள் என்ற அறியாமையில் எத்தனையோ வைகறை விடியல்களை தொலைத்துவிட்டு இ;ன்னும் துயிலுகிறார். பள்ளி எழுந்தருளாமல்.

# மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் போதனா வைத்தியசாலை செயற்பட வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதான வைத்தியசாலையின் செயற்பாடு வினைத்திறன் மிக்கவையாக முன்னெடுப்பதற்கான சூழலை உருவாக்கி, மக்களின் மனங்களில் வைத்தியசாலை தொடர்பான நம்பிக்கையை வலுப்படுத்துவதே தன்னுடைய எதிர்பார்ப்பு என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்போதனா வைத்தியசாலைக்கான விஜயத்தினை நேற்றுமேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புதிதாக நியமிக்கப்பட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் மற்றும் வைத்தியசாலை நிர்வாத்தினருடனான கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பல்வேறு ஏக்கங்களுடன் வைத்திய சேவையினை எதிர்பாத்து வருகின்ற மக்களுக்கு நம்பிக்கையினை ஏற்படுத்த வகையில் வைத்தியசாலையின் உட்கட்டுமானங்களும், வைத்திய பராமரிப்புக்களும், நிர்வாக செயற்பாடுகளும் அமைவதை உறுதிப்படுத்த வேண்டும். இதன்மூலம் முதற்கட்டமான பரிகாரத்தினை நோயாளர்களுக்கு வழங்க முடியும்.

அண்மை நாட்களில் வைத்தியசாலையில் இடம்பெற்ற சில துரதிஸ்ட சம்பங்கள் போன்று எதிர்காலத்தில் நடைபெறாது இருப்பதை வைத்தியசாலையுடன் சம்மந்தப்பட்ட ஒவ்வொருவரும் உறுதிப்படுத்த வேண்டும் என்பதே என்னுடை எதிர்ப்பார்ப்பாக இருக்கின்றது.

அதனை புரிந்துகொண்டு, வெறுமனே கடமையை செய்வதாக கருதாமல், ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற சமூகப்பொறுப்பினை உணர்ந்து செயற்படுவோமாக இருந்தால் ஒரு சிறந்த வைத்திய சாலையாக எமது இந்த வைத்தியசாலையை செயற்படுத்த முடியும் என்றார்.

மேலும்,இந்த வைத்தியசாலையின் தேவைகள் மற்றும்குறைபாடுகள்தொடர்பாக உடனுக்குடன் எனது கவனத்திற்கு கொண்டு வரப்படும் பட்சத்தில், துறைசார் அமைச்சரினதும் அமைச்சரவையினதும் கவனத்திற்கு கொண்டு சென்று அவற்றை நிவர்த்தி செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை என்னால் மேற்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.(ம-7,33,60)

## போதனா வைத்தியசாலைக்கு அபிவிருத்திக்குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்போதான வைத்தியசாலைக்கு புதிய அபிவிருத்திக்குழு ஒன்று நேற்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவின் தலைவராக வாழ்நாள் பேராசியரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் செயலாளராக சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றய கூட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பூர்த்தி செய்யப்படாத கட்டங்கள், யாழ். போதனாவிற்கு புதிய காணிகளை கொள்வனவு செய்தல்,வடக்கில் அதிகரித்துவரும் டெங்கு தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

குறித்த கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-7)

## வீதியால் நடந்து சென்ற பெண்ணின் சங்கிலி அறுப்பு

### வதிரியில் சம்பவம்

(கரணவாய்)

வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் ஒன்றை முக்கால் பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலி ஒன்று அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை (22) பிற்பகல் மழை பெய்து கொண்டிருந்தபோது வதிரி உள்ளிய நெல்லை அம்மன் வீதியால் பெண் ஒருவர் நடந்து சென்று கொண்டிருந்த போது பின்னால் துவிச்சக்கரவண்டியில் வந்த இளைஞர் ஒருவர் பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளான். இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## பல்கலை மாணவன் விபத்தில் உயிரிழப்பு

(கம்பளை)

கம்பளை - கண்டி பிரதான வீதியில் வெலிகல்ல நகரில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் தனியார் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் உயிரிழுந்துள்ளார்.

இந்த விபத்தில் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கம்பளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தவுலகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பளை பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய ஓஷத பந்துல பண்டார அலஹகோன் என்ற இளைஞனே விபத்தில் உயிரிழந்துள்ளார். (ம-7)

# இலங்கையின் உள் விவகாரங்களில் ரஷ்யா ஒருபோதும் தலையிடாது

## இலங்கைக்கான ரஷ்ய தூதுவர்

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகளை ரஷ்யா ஒருபோதும் விமர்சிக்கவோ அல்லது தலையிடவோ போவதில்லை என இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் ஜகார்யன் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய தூதரகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இறையாண்மை கொண்ட நாடு என்ற வகையில் இலங்கை தனது சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையை தொடர முடியும்.பாதுகாப்பு விவகாரங்களில் ஜனாதிபதி புடினின் தலைமை ஆலோசகர் நிகோலாய்பட் ருஷேவ் தலைமையிலான ரஷ்ய பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

அவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன மற்றும் பலருடன் மிகவும் நன்றாக கலந்துரையாடினார்.சில நாடுகளால் இலங்கை அழுத்தத்தில் இருப்பதை நாங்கள் கண்டோம்.

உங்கள் நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் கருத்து தெரிவிப்பதை நான் எப்போதும் தவிர்க்கிறேன். உங்கள் நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் நாங்கள் விமர்சிக்கவோ அல்லது தலையிடவோ இல்லை.

நான் ஒரு அமெரிக்க தூதரோ அல்லது பிரித்தானிய உயர்ஸ்தானிகரோ அல்லது மேற்கத்திய தூதர்களோ அல்ல. இலங்கையில் ஒரு சிறிய அணுமின் நிலையம் நிறுவ எதிர்பார்க்கப்படுகின்றது. அது 110 மெகாவாட் மின் நிலையம் ஆகும்.

இலங்கைக்கு மாற்று எரிசக்தி தேவை என்பது எனது கருத்து. ஆனால் அதை முடிவு செய்வது இலங்கையின் உரிமையும் விருப்பமும் ஆகும் எனத் தெரிவித்தார்.(ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** விநியோகம்: இணுவில், இணுவில் கந்தசாமி கோயில், மஞ்சத்தடி இணுவில், மருதனார்மடம் சந்தை, நாதன் கடை இணுவில், பாலாவோடை, இணுவில் கோண்டாவில் புகையிரத நிலைய வீதி, தாவடி, உப்புமடம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

21

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் அல்லது உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமனப் பத்திரங்கள் தேர்தல்களுக்காக சமர்ப்பிக்கப்படும் போது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப் படுத்துகைகளைச் செய்தல் வேண் டும்.

சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளின் சமர்ப்பிப்பு நடைமுறை பற்றியும் இப்பாகத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

### சொத்துக்களும் பொறு ப்புக்களும் பற்றிய வெளிப்ப டுத்துகையைப் பார்வையிடுவதற்கான தத்துவம்

சட்டத்துறைத் தலைமையதிபதி, ஆணைக்குழு, உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலை மையதிபதி, செலாவணிக் கட்டுப் பாட்டுத் திணைக்களத் தலைவர், பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி, விசேட பொலிஸ் அலகுகளின் பெயர் குறிக்கப்பட்ட அலுவலர்கள், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் நிதிசார் உளவறிதற்கூறின் பெயர் குறிக்கப்பட்ட அலுவலர்கள், மத்திய அதிகாரசபையின் வலுவளிப்புடன் இப்பாகத்தின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய ஏதேனும் வெளிப்படுத்து கையைக் கோருவதற்கும் பார் வையிடுவதற்குமான உரிமை யைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### ஒருவரின் சொத்து பற்றிய விபரத்தை பொதுமக்கள் அனுகுகை

மத்தியமயமாக்கப்பட்ட இலத்திரனியல் முறைமையானது, ஆணைக் குழுவின் அலுவலக முறையான வலைத்தளத்தினூடாக அது சமர்ப்பிக்கப் பட்டதிலிருந்து ஒரு மாதத் தினுள் பொதுமக்களுக்கு அணுகத் தக்கதாகவுள்ள சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய ஒவ்வொரு வெளிப்படுத்துகையின் வெளியிடத் தயாரான வடிவத்தை தன்னியக் கமாக தோற்றுவித்தல் வேண்டும்.

அத்தகைய வெளியிடத் தயாரான வடிவம் பின்வரு வனவற்றை உள் ளடக்குதல் ஆகாது.

(அ) வெளிப்படுத்துநரின் அல்லது எந்த ஆளின் சொத்துக்கள் வெளிப்படுத்துநரினால் வெளிப் படுத் தப்படுகின்றதோ அந்த எவரேனும் வேறு ஆளின் வதிவிட முகவரி

(ஆ) எந்த வட்டாரம் மற்றும் மாவட்டத்தில் நிலைச்சொத்து அமைந்துள்ளதோ அந்த வட்டாரம் மற்றும் மாவட்டம் தொடர்பான தகவல்கள் தவிர வெளிப்படுத் தப்பட்ட நிலைச்சொத்தின் முழுமையான முகவரி/முகவரிகள்.

(இ) வெளிப்படுத்துகையில் குறிப்பிடப்பட்ட தனியாட்களை ஆளடையாளம் காணும் நோக்கத்துக்காக, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கடவுச்சீட்டு இலக்கம் அல்லது இயைபான அதி காரசபைகளினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் இலக்கம்.

(ஈ) வங்கிக் கணக்கு இலக்கங்கள் அல்லது

(உ) வேறு எவையேனும் வைப்பு விபரங்கள்:

ஆயின், சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத் துகையொன்றின் மேலே சொல்லப்பட்ட வெளியிடத் தயாரான வடிவத்தை தோற்றுவிக்கும் போது, ஆணைக் குழு வெளியிடத்தயாரான வடிவத்தைப் பெற்றுக் கொள்ளும் ஆளின் அடையாளத்தை உறுதிசெய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆளின் அடையாளம் பதிவு செய்யப் படுதலும் வேண்டும்.

### தேர்தல்களுக்கான வேட்பாளர்களின் வெளிப்படுத்துகைகளுக்கான அனுக்கம்

தேர்தல்களுக்கான வேட்பாளர் ஒவ்வொருவரும் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்ப டுத்துகையின் படிவத்தின் பிரதி யொன்றையும் சுருக்கமொன்றையும் அத்தகைய வேட்பாளரின் நியமனப்பத்திரங்களுடன் சேர்த்து தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

### சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகை தொடர்பான தவறுகள்

சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகள் எந்த ஆளுக்கு ஆக்கப்படவிருக்கின்றதோ அந்த ஆள் ஒருவர் ஒவ்வொரு ஆண்டின் யூன் மாதம் முப்பதாந் திகதியிலிருந்து இரண்டு வாரங்களினுள் அப்பாகத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறியிருப்பின், அத்தகைய ஆள் மத்திய அதிகாரசபையினால் கடிதம் அனுப் பப்படுவதன் மூலம் எச்சரிக்கப்படுதல் வேண்டும்.

தனது ஆண்டு வெளிப்படுத்துகையை அல்லது ஓய்வுக்குப் பின்னரான வெளிப்படுத்துகையை உரிய திகதியன்று சமர்ப்பிக்க தவறுகின்ற எவரேனும் ஆள், உரிய வெளிப் படுத்துகைத் திகதியிலிருந்து தொட ங்கி யூலை மாதம் முப்பத்தோராம் நாள் வரையான காலப்பகுதிக்காக வெளிப்படுத்துநரின் கடைசியாகப் பெறப்பட்ட மொத்த மாதாந்த சம்பளத்தின் முப்பதிலொரு பங்கிற்கு சமமான மத்திய அதிகாரசபையினால் விதிக்கப்படும் நாளாந்த நிர்வாகக் குற்றப்பணமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

கடைசி ஆறு மாதங்களுக்கான கடைசியாக பெறப்பட்ட மொத்த சம்பளத்தின் முப்பதிலொரு பங்கிற்கு சமமான அதிகரிக்கப்பட்ட நாளாந்த நிர்வாக குற்றப்பணமொன்று ஒகஸ்ட் முதலாந் திகதியிலிருந்து ஒகஸ்ட் முப்பத்தோராம் திகதிவரை பிந்திய சமர்ப்பிப்புகளுக்காக விதிக்கப்படும். இக்குற்றப்பணம் விடயத்திற்கேற்ப ஊதியத்தின் அல்லது ஓய்வு நன்மை மீதான மிகைக் கட்டணமொன்றாக இருத்தல் வேண்டும்.

முதலாவது நியமன வெளிப்படுத்துகையை, நிமித்த வெளிப்படுத் துகையை அல்லது பதவிக் கால முடிவு அல்லது ஓய்வுபெறும் வெளிப் படுத்துகையை உரிய திகதியன்று சமர்ப்பிக்கத் தவறுகின்ற எவரேனும் ஆள், வெளிப்படுத்துநரின் கடைசி யாகப் பெறப்பட்ட மொத்த மாதாந்த சம்பளத்தின் முப்பதிலொரு பங்குக் குச் சமமான மத்திய அதிகார சபையினால் விதிக்கப்படும் நாளாந்த நிர்வாக குற்றப்பணமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

தேர்தலொன்றிற்கான பெயர் நியமனத்திற்கான தனது விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து தனது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத் துகையை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள், இயைபான எழுத்திலான சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க வலுவளிப்புகளுக்கு ஆளாதல் வேண்டும்.

இயைபான ஆண்டின் செப்டெம்பர் முதலாம் திகதிவரை விடயத்திற்கேற்ப, ஆண்டு வெளிப்படுத்துகையை அல்லது ஓய்வுபெற்ற பின்னரான வெளிபபடுத்துகையைச் சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற எவ ரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப் படுவதன் மீது அவ் வாளின் பன்னிரெண்டு மாதங்க ளுக்கான கடைசியாக பெறப்பட்ட மொத்த சம்பளங்களுக்குச் சமமான குற்றப் பணமொன்றிற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக் காலமொன்றிற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

முதலாவது நியமன வெளிப்படுத்துகையை, நிமித்த வெளிப் படுத்துகையை அல்லது பதவிக் கால முடிவு அல்லது ஓய்வு பெறும் வெளிப்படுத்துகையை உரிய திகதியின் பின்னர் இரு பத்தெட்டு நாட்கள்வரை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்ப துடன் நீதிவான் ஒருவரின் முன் னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப் பளிக்கப்படும்.

குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத மறியற்றண்டனைக் காலமொன்றிற்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசியல்...

கலந்துரையாடலானது குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் இன்று காலை 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான குறித்த கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு பொது அமைப்புக்கள், சிவில் செயற்பாட்டாளர்களுக்கு குரலற்றவர்களுக்கான குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் அழைப்பு விடுத்துள்ளார். (ம-7)

## மன்னார்...

அதற்கமைய இன்று சனிக்கிழமை காலை அரச அதிபராக பதவியேற்கவுள்ளார்.

2019 டிசம்பர் 16 முதல் 2023 நவம்பர் 21 வரையில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபராகப் பணியாற்றிய வேளை நிர்வாக சேவை விசேட தரத்துக்குத் தேர்வாகிய அவர், 2023 நவம்பர் 22 முதல் தற்போது வரையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராகப் பணியாற்றினார்.

இந்தநிலையில் இன்று சனிக்கிழமை முதல் மன்னார் மாவட்ட அரச அதிபராகப் பதவியேற்கும் வகையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அவருக்கு நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## உணவுப் பொருட்...

பிடுகையில்இது 1.8வீத அதிகரிப்பாகும்.

இதற்கிடையில், உணவுப் பணவீக்கம் ஒக்ரோபரில் -2.2% ஆக இருந்த நிலையில், நவம்பரில் -5.2% ஆக அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் உணவு அல்லாத பணவீக்கம் ஒக்ரோபரில் பதிவான 6.3% இலிருந்து 7.1% ஆக அதிகரித்துள்ளது.

மரக்கறிகள் (0.62%), அரிசி (0.14%), சீனி (0.09%), தேங்காய் (0.06%), பெரிய வெங்காயம் (0.06%), பச்சை மிளகாய் (0.06%), சிவப்பு வெங்காயம் (0.05%) ஆகியவற்றுக்கான குறியீட்டு மதிப்புகளும் அதிகரித்துள்ளன.

சுண்ணாம்பு (0.03%), தேங்காய் எண்ணெய் (0.02%), உருளைக்கிழங்கு (0.02%), மைசூர்பருப்பு (0.01%), தேயிலை (0.01%) மற்றும் பழங்கள் (0.01%) ஆகியவற்றின் குறியீட்டு மதிப்புகளும் அதிகரித்துள்ளன. (ம-7)

## கொரோனாவின்...

தமது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் அவர் இந்தத் தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

கோவிட்-19 சோதனைகள் தற்போது குறைந்தளவிலேயே முன்னெடுக்கப்படுவதால், அதன் உண்மையான தரவுகளை பெற முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கொரோனா வைரஸுக்கு எதிரான நோயெதிர்ப்பு தடுப்பூசிகள் இன்னும் வழங்கப்படுகின்றன.

அதிக பாதிப்பினை எதிர்கொள்ளும் தரப்பினர் பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெறுவது முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு காய்ச்சலும் பரவும் நிலையில், தொடர்ச்சியான காய்ச்சல் காணப்படுமானால், அது தொடர்பில், பொது மக்கள் உரிய மருத்துவரை அணுகி ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மக்கள்...

தரப்பினருக்கு மக்கள் அறிவிக்க வேண்டும்.

மக்கள் தமது வாக்குரிமைக்காக எழுந்து நிற்கும் வரை தேர்தல் நடத்தப்படமாட்டாது.

ஜனாதிபதித் தேர்தலையோ அல்லது பொதுத் தேர்தலையோ இஷ்டத்துக்கு ஒத்திவைக்க முடியாது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான சட்டங்கள் இன்னும் அமுலில் உள்ளதா? என்பதை கண்டறிய வேண்டியது பொறுப்பு வாய்ந்த தரப்பினரின் பொறுப்பு என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஜனாதிபதித்...

கத்தயாராக இருக்கிறேன் என தமிழ் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படும்போது சிலர் இவர் ரணிலின் ஆள் என்றனர்.

நான் யாருடைய ஆளுமல்ல. தமிழ் மக்களுக்கு எதையாவது பெற்றுக் கொடுக்க வேண்டும் என முயற்சி செய்தேன். அது நடைபெறவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசினேன். சரிவராது என தோன்றியதால் விலகினேன் என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டார். (ம-7)

# கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் காலமானார்



முன்னாள் கிழக்கு மாகாண முதல் அமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் கொழும்பு த்னியார் வித்தியாசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று காலமானார்.

25 வருட கிழக்கு மாகாண சபை வரலாற்றில் முதலாவது முஸ்லிம் முதலமைச்சர் என்ற அடையாளத்தைக் கொண்ட நஜீப் அப்துல் மஜீத் தனது 66 ஆவது வயதில் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் நேற்றுக் காலமானார்.

நீண்ட அரசியல் வரலாற்றை கொண்ட நஜீப் அப்துல் மஜீத், 1994 இல் தனது முதலாவது பாராளுமன்ற பிரவேசத்தை ஆரம்பித்து,

தபால் தொலைத்தொடர்பு பிரதி அமைச்சராக - திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி அமைச்சராக, கூட்டுறவு அமைச்சராக, இருந்து பின்னர் 2012 செப்ரெம்பர் தொடக்கம் 2015 வரை கிழக்கு மாகாணத்தின் முதலாவது முஸ்லிம் முதலமைச்சர்என்ற அடையாளத்தை தன்னகத்தே கொண்டார்.

இவரது தந்தையாகிய முன்னாள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சராக இருந்து பெரும் பணிகளை சமூகத்தின்பால் நின்று ஆற்றிய அப்துல் மஜீத் இன் மரணத்தை தொடர்ந்து தனது அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்து பல்வேறு பணிகளை ஆற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மசகு...

30ஆம் திகதிக்கு பின்னர் ஏற்பட்ட அதிகூடிய விலை உயர்வாக இது கருதப்படுகின்றது. (ம-7)


லக்சி 7 VIP
திகதி 2023.12.22
சீட்டிழுப்பு இலக்கம் 0162
M 8 0 4 8 3 5 M

தன நிதானய
திகதி - 2023.12.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1366
Y 21 68 71 77 Y
37341

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3578
சீட்டிழுப்பு திகதி 22.12.2023
Q 14 18 45 53
Q
40546

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.22
சீட்டிழுப்பு இலக்கம் 0645
மிதுனம் 22 48 51 56 மிதுனம்
55844 03

மஹஜன சம்பத
திகதி 2023/12/22
சீட்டிழுப்பு இலக்கம் 5336
M 3 0 5 0 9 7

மெகா பவர்
திகதி 22/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1684
U 15 07 28 45 74
00898

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2310 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.12.22 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 41 62 70 75 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,860,132/-
88869

உத்தியோகபூர்வ முடிவுகள்
22.12.2023 வெற்றி வாரம் 044
O 5 0 0 8 7 2
65156
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 24,562,275.20
தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

சனிதா
திகதி 2023.12.22 வெற்றி வாரம் 4471
06 14 39 72 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,662,980.00
36068

சசிரி
வெற்றி வாரம் 418
சீட்டிழுப்பு திகதி 2023.12.22
பச்சை
வெற்றி இலக்கங்கள் 15 16 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,964,920/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4022 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.22 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 14 33 38 43
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,051,318.80
994467

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 20 05 54 61 67
1486
2023.12.22 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 480,923,074.20

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2136
சீட்டிழுப்பு திகதி : 2023.12.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,023,762.40/-
12 56 60 75 A
746650


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes

இல. 53, சிவகுருநாதர் வீதி,
**Brown Rd, Jaffna.**
077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (18299)

# உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-7982)

V2 TRAVELS

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

# மணமகள் தேவை

1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

Viber or Whatsapp
**0044 7578 626565, 077 251 9150**
Email add: rajasasikumar@gmail.com (18318)

# வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியூவில்
1 3/4 பரப்பு வீடு
விற்பனைக்குண்டு

தொடர்பு (18330)
**077 732 6792**

# காணி விற்பனைக்கு

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 33 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ளமுடியும்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18319)

**077 468 3354, 071 173 3911**

# சிறிராம் ஜுவல்லர்ஸ்

**இல. 158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி.





- செய்கூலி, சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
- அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும். ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்
- அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலைவரத்தின் படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.



**077 165 1729, 077 773 0567, 021 222 8334**



(18331)

# Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 282/= (Max 5Kg) |
| 1 Kg றவை | - 289/= |
| 1 Kg கோதுமை மா | - 183/= |
| 1 Kg Prima கோதுமை | - 189/= |
| 1 Kg அரிசி மா | - 199/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 299/= (Max 2Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 430/= |
| 1 Kg தீட்டல் பச்சை அரிசி | - 175/= |
| 1 Kg சம்பா அரிசி | - 230/= (Max 3Kg) |
| 400g sustagen சஸ்ரயன் | - 3435/= ~~(3900/=)~~ |
| 180ml Chik Shampoo | - 370/= ~~(430/=)~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 275/= ~~(330/=)~~ |
| 500ml Vim Liquid | - 390/= ~~(425/=)~~ |
| 70g Baby Soap | - 112/= ~~(145/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= ~~(80/=)~~ |

1025/=




~~1080/-~~

(18332)

**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**


தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30


# 1ம் ஆண்டு நினைவு நாள்...

23.12.2023



## சிவசுந்தரம் வர்ஷனன்

(Dip in Civil Engineering)

வர்ஷனன் எங்கள் வாழ்வின் விடியல்
வளர் நிலவாகி வாண்மைகள் பெற்றோன்
கல்வியும் கலைகளும் நிலையெனப் பெற்று
சொல்லிலும் செயலிலும் சோர்விலனாகி
இன்பமாய் எங்கள் இதயத்துள் இருந்தோன்
இருபத்து நான்கில் இன்னுயிர் விட்டு
இறைபதம் அடைந்து ஆண்டொன்றாகியும்
ஆறாத்துயரில் அமிழ்ந்தே போனோம்

"வர்ஷ மஹால்"
23, உடுவில் வீதி,
மானிப்பாய். (18253)

நீங்கா நினைவுடன்
அப்பா, அம்மா, அக்கா
மற்றும் உறவினர்கள்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 1940.04.16
மறைவு 2023.11.23

அமரர் **செல்லையா மார்க்கண்டு**

நிஜம் என்பதைத் தொலைத்தாலும் என்றும்
நிழலாய் தொடரும் உங்கள் நினைவு

இத்தாவில் பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் 31 ஆம் நாள் நினைவுக்கிரியை, ஆத்மா சாந்திப் பிரார்த்தனை என்பன இன்று 23.12.2023 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

கடந்த 23.11.2023 வியாழக்கிழமை அன்று அன்னார் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் ஆறுதல்கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் மாலைகள், கண்ணீர் அஞ்சலிப் பதாகைகள் சாத்தியவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது துயரில் பங்கு கொண்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இத்தாவில்,
பளை. (18333)

தகவல்: குடும்பத்தினர்
077 821 0148/ 077 610 8665

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org